
உ

சிவமயம்

# தித்திக்கும் திருமுறை அமுதம்

## பாகம் - I



"கலைவாரிதி"


எஸ். சிவானந்தராஜா

2010

உ

# தித்திக்கும் திருமுறை அமுதம்

## பாகம் – I



நூலாசிரியர்

**எஸ். சிவானந்தராஜா**

**2010**

நூலின் பெயர் : தித்திக்கும் திருமுறை அமுதம்
பாகம் - I

நூலாசிரியர் : எஸ். சிவானந்தராஜா
இந்துக்கல்லூரி வீதி, செட்டிகுறிச்சி,
பண்டத்தரிப்பு. (இலங்கை)

பதிப்புரிமை: நூலாசிரியருக்கு

பிரதிகள் : 300

நூலின் அளவு : 148mm x 210mm

முதற்பதிப்பு: 30.12.2010

அச்சுப்பதிப்பு : ஸ்ரீ மாருதி
வழக்கம்பரை, சுழிபுரம்,
யாழ்ப்பாணம்.

நூலின் விலை : ரூபா 150/=

# சமர்ப்பணம்



அறிவாலயமாக விளங்கிய
அமரர்கள்
**திரு. சூரிப்பிள்ளை பாலயோகன்**
B.Sc (Cey) Dip.in Ed. அவர்களுக்கும்
(1942 – 2010)
**திருமதி சீதாலட்சுமி பாலயோகன்**
B.Sc, B.Ed. அவர்களுக்கும்
(1944 – 2008)
(முன்னாள் கொக்குவில் இந்துக்கல்லூரி ஆசிரியர்கள் - 1972 - 1984)
இந்நூல் சமர்ப்பணம்.



தேவி மயம்

# மகாமாரி அம்பாள் தேவஸ்தானம்
# Mahamari Ambal Thevasthanam


Siva Sri S. Sunthararajah Kurukkal
Chief Priest
Vadakkamparai,
Tholpuram,
Chulipuram
Sri Lanka.

சிவஸ்ரீ சு. சுந்தரராஜக்குருக்கள்
பிரதம குருக்கள்
வழக்கம்பரை,
தொல்புரம்,
சுழிபுரம்.
சிறிலங்கா.


---

"தித்திக்கப்பேசுவாய் வந்துன், கடைதிறவாய்" என்பது மணிவாசகரின் வாக்காகும். தித்திக்கப் பேசுவதினாலும் பாடுவதினாலும் தித்திப்பானவற்றை ஆண்டவனுக்கு நெய்வேதனம் செய்வதினாலும் ஆண்டவனுடைய அருளையும், அன்பையும் பெறலாம் என்பது ஆன்றோர் வாக்கு. எனவே "தித்திக்கும் திருமுறை அமுதம்" என்னும் நூல் வெளிவருவதையிட்டு பெருமகிழ்ச்சி யடைகின்றோம்.

சைவ சமயத்தையும் தமிழ்மொழியையும் பாதுகாத்தவர்கள் எமது சைவ சமயகுருமார்களே. அதனால் அன்றோ நாம் குருமார்களாகிய நாயன்மார்களுக்கு குருபூசை வழிபாடுகள் நடாத்தி அதன்படி ஒழுகிவருகின்றோம். "தெளிவு குருவின் திருவார்த்தை காணல்" என ஆரம்பித்து "தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே" என்பதை நூலாசிரியர் உறுதிப்பட எடுத்துரைப்பது அவரின் குருபத்தியை எடுத்துக்காட்டுகின்றன. அதனால் அன்றோ குருவருளின்றி திருவருள் இல்லையென் பார்கள் பெரியோர்கள்.

அத்துடன் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக, நாயன்மார்கள் ஆற்றிய பல்வேறுபட்ட இறைபணிகளை சரியை, கிரியை,

யோகம், ஞானம் என்பவற்றிற்கேற்ப வகுத்து ஆராய்ந்து எடுத்துரைத்திருப்பது நூலாசிரியரின் சிந்தனைகளையும் செயற் பாட்டினையும் நாம் விதந்து உரைக்கவேண்டியதொன்றாகும்.

இப்பேற்பட்ட புனிதமான சிறப்பான பெருமை பொருந்திய திருமுறைகளை பண்ணோடு சொற்பிழையற்று ஓதியும் அதன்படி ஒழுகியும், "தான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற உன்னதமான கோட்பாட்டிற்கமைய திரு. எஸ். சிவானந்தராஜா அவர்கள் பல ஏடுகளை ஆராய்ந்து ஆய்வு செய்து எழுதிய காத்திரமானதும் பெறுமதியுமான இந்நூல் சைவப் பெருமக்கள் வாழ்வாங்கு வாழ வழிசமைக்கும் என்பதில் எவ்விதமான ஐயுறவுமில்லையாம்.

திரு. எஸ். சிவானந்தராஜா அவர்கள் முன்பும் சிவனுடைய நாமங்களை அச்சிட்டு வெளியிட்டமையும் தற்போது "தித்திக்கும் திருமுறை அமுதம்" என்ற நூலை வெளியிட்டும் மேலும் சைவசமயம் சார்ந்த நூல்களை வெளிவரச் செய்தும் இறைபணியாற்ற சுழிபுரம் வடகிழக்கு சரித்திரப் பிரசித்திபெற்ற சம்புநாத சுவாமியாகிய பஞ்சமுகலிங்கேஸ்வரப் பெருமானின் திருவருள்பாலிக்கப் பிரார்த்தித்து திரு. எஸ். சிவானந்தராஜா அவர்கள் சகல சௌபாக்கியமும் பெற்று வாழ எனது நல்லாசி களையும் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களும் உரித்தாக்கு வோமாக.

**சிவஸ்ரீ சுப்பிரமணிய சுந்தரராஜக்குருக்கள்**

30.12.2010 (பிரதமகுரு)

உ

# முகவுரை

திருமுறையாசிரியர்கள் யாவரும் இறைவனைப் பணிந்து வழிபட்டு சிவானுபூதிபெற்ற சீலர்கள். தாம்பெற்ற இறைகளோடி சைந்த இன்பத்தை, ஏனையோரும் பெற்று பேரின்ப வாழ்வைப் பெற வேண்டும் என்ற நன்னோக்கில் நமக்கு திருமுறைப் பாடல்களாகத் தந்தருளினர். இவர்களது ஒவ்வொரு பாட்டிலும் சரி, ஒவ்வொரு திருப்பதிகத்திலும் சரி, இறைவனது அளவிடற் கரிய பெருமைகளையும், ஆன்ம ஈடேற்றத்திற்குரிய வழிமுறை களையும் சொல்லி எம்மை நல்வழிப்படுத்துகின்றனர். பன்னிரு திருமுறை ஆசிரியர்கள் இருபத்தேழு பேரும், தந்த 76 நூல் களில் சுமார் 18, 326 பாடல்கள் அடங்கியுள்ளன.

இத்திருமுறைகளைப் படிக்கும்போது ஏற்படுகின்ற சில பொதுவான கருத்துக்களைத் தொகுத்து இந்நூலில் தருவதோடு, திருமுறைக் கடலில் ஏனையோரும் மூழ்கி நல்ல கருத்துக்களை முன்வைக்க வேண்டும் என்று சைவ உலகை வேண்டுகின்றேன். பன்னிரு திருமுறைகளையும் பொருளுணர்ந்து படிக்கும்போது, மேலும் மகோன்னதமான கருத்துக்கள் வெளிப்படும் என்பதை உணர்ந்து ஒவ்வொருவரும் **"தித்திக்கும் திருமுறை அமுதம்"** என்னும் இந் நூலை நுகர வேண்டும். ஏற்கனவே இத்துறையில் பாண்டித்தியம் பெற்ற ஞானிகள், தமது அனுபவக் கருவூலங் களை, மற்றவர்களும் பெற்றுய்ய வழி சமைக்கவேண்டும் என பணிவுடன் வேண்டுகின்றேன்.

பன்னிரு திருமுறைகளையும் பொருளுணர்ந்து படித்தின்புற, ஒவ்வொரு வீட்டிலும் இத் திருமுறைகளைத் தினமும் பாராய ணஞ்செய்வது நியமமாகக் கொள்வது ஒவ்வொருவரினதும் கடமையாகும். தமிழ்வேதத்தை நாம் பாராயணஞ் செய்வோம்.

நன்றி

இந்துக்கல்லூரி வீதி,
செட்டிக்குறிச்சி,
பண்டத்தரிப்பு.

"அளவெட்டி"
எஸ்.சிவானந்தராஜா
30.12.2010

# பொருளடக்கம்


ஆசியுரை

முன்னுரை

| | | |
|---|---|---|
| 1. | திருமுறைப்பாடல்கள் (பொது) | 1 |
| 2. | திருமுறைகளும் ஓங்காரமும் | 6 |
| 3. | திருமுறைகளும் ஓதுவார்களும் | 8 |
| 4. | திருமுறைகளும் பண்களும் | 11 |
| 5. | திருமுறைகளின் தொகுப்புக்கள் | 20 |
| 6. | திருமுறைகள் காட்டும் உருவத் திருமேனி கொள்ளும் சிவனின் வடிவங்கள் | 23 |
| 7. | ஆலய வழிபாடும் திருமுறைகளும் | 28 |
| 8. | திருமுறைகளில் சைவசித்தாந்த உண்மைகள் | 33 |
| 9. | இறைவன் உறையுங் கோயில்கள் | 40 |
| 10. | இறைவனை தேவரும் முனிவரும் கந்தருவரும் பணிந்தேத்துவர் | 43 |
| 11. | இறைவன் ஆடிய திருக்கூத்துக்களும் திருமுறைகளும் | 44 |
| 12. | இறைவனது அட்டவீரங்களும் திருமுறைகளும் | 45 |
| 13. | இறைவனை நீரும் - பூவும் கொண்டு வணங்குதல் | 46 |
| 14. | திருக்கோயில்களில் திருநீறு அணிதல் | 49 |
| 15. | திருமுறைகளில் திருவைந்தெழுத்து | 51 |
| 16. | திருமுறைகளில் நாயன்மார்கள் | 57 |
| 17. | திருமுறைகளும் சிவனடியார் 23 இலக்கணமும் | 65 |
| 18. | திருமுறைகளும் திருமுறை ஆசிரியர்களும் | 70 |

உ

# 1. திருமுறைப்பாடல்கள் - பொது

**"என்கடன் பணிசெய்து கிடப்பதே"** **(5–133–9)**

**"தென்னாடுடைய சிவனே போற்றி**
**என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி"**

(திருவாசகம் - போற்றித் திருவகவல் 164–165)

**"நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"** (திருமந்திரம்)

வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தத் திறத்தினை, திருமுறைப்பாடல்கள் தருகின்றன. திருமுறை என்பது, சிவனருளால் வரும் பேரின்பத்தை அடையும் மார்க்கம் எனப் பொருள் படும். எனவே திருமுறைகள் எமக்குரிய சிவநெறி– அருள்நெறி - இன்பநெறி – திருநெறி ஆகும்.

தேவாரம்,திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமுகப்பாசுரம் முதலான நாற்பது பிரபந் தங்கள், திருமந்திரம் உள்ளடக்கிய பாடல்களை. திருநாரையூர் நம்பியாண்டார் நம்பி அவர்கள் பதினொரு திருமுறைகளாக வகுத்தருளினார். மந்திரங்கள் பதினொன்றாதலால், திருமுறை களும் பதினொன்றாக வகுக்கப்பட்டது. சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணம் பன்னிரண்டாவது திருமுறையாகப் பின்னர் யாவரும் ஏற்றுக்கொண்டனர். திருமுறைகள் பதினொன் றாக வகுக்கப்பட்டதை, திருமுறைகண்டபுராணம் (பாடல்28) பின்வருமாறு கூறும்:-

**"மந்திரங்க ளெழுகோடி யாதலினான் மன்னு மவ**
**ரிந்தவகை திருமுறைகளேழாக வெடுத்த மைத்துப்**
**பந்தமுறு மந்திரங்கள் பதினொன்று மாதலினா**
**லந்தமுறை நான்கினொடு முறைபதினொன் றாக்கினார்"**

சேக்கிழார் புராணத்தின் தொண்ணூற்றாறாவது பாடல் பின்வருமாறு கூறும்,

**"மூவரோதுதிரு முறைகளேழுதிரு வாதவூரர்முறை யொன்றிசைப்**
**பாவரைந்தமுறை யொன்றுமூவர்முறை யொன்று பாசுரமதாதியாக்**
**கோவை செய்தமுறை யொன்று சேவையர் குலாதிநீதிமுறை யொன்றுடன்**
**பாவை பாகர்திரு வருள்சிறந்தமுறை பன்னிரண்டென வகுத்தபின்"**

இறைவனது திருவருள் கிடைக்கப்பெற்ற அருளாளர்களின் உள்ளத்தே இறைவன் புகுந்து அவர்களைத் திருமுறை பனுவல்களைப் பாடவைக்கின்றான். அவர்கள் உள்ளம் திருவருள் ஒளியில் திளைக்கின்றது. இதனை

**"வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்**
**மிக நல்ல வீணை தடவி**
**மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்**
**உளமே புகுந்த அதனால்'.."**

எனக் கூறுகின்றார் - திருஞானசம்பந்தர்.

இறைவனை அடையும் நால் வகை மார்க்கங்களாவன

கிரியைநெறியில் - சம்பந்தப்பெருமான் பிள்ளைபோல் அன்புகாட்டியும்
சரியை நெறியில் - நாவுக்கரச ஸ்வாமிகள் அன்புடன் பணி செய்தும்
யோக நெறியில் - சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் நண்பனாய் அன்பு செலுத்தியும்
ஞானநெறியில் - மாணிக்கவாசக ஸ்வாமிகள் மாணாக்கனாய் அன்பு செலுத்தியும்

திருவருளமுதனைய பாடல்களைப்பாடி பரவசங் கொண்டனர்.

தெய்வத் திருமுறைப் பாடல்கள் யாவும், செந்தமிழும் இசையும் கலந்து உள்ளத்திலே இறைவன் நின்றுணர்த்த, அருளாளர்களால் பாடப்பட்டவையாகும். இந்த உண்மையை எடுத்துரைக்கும் வண்ணம், திருஞானசம்பந்தர் தந்த முதலாந் திருமுறையில் வரும் "திருவிலம்மைக்கோடு" பதிகத்தில் வரும்

முதற் பத்து பாடல்களிலும் "எனதுரை தனதுரையாக" என வரும் பாடல் வரிகள் அமைந்துள்ளன.

**"..... எனதுரை தனதுரையாக நீறணிந்**
**தேறுகந் தேறிய நிமலன் ....."** **(1 - 76 - 1)**

மேலும் அருளாளர்களின் சில பாடல் வரிகள்.

**"கழுமலநகர்ப் பழுதிலிறை யெழுது மொழி**
**தமிழ்விரகன் வழிமொழிகள் மொழிதகையவே"** **(3-325-12)**

**"என்னுள்ளே நிற்கும் இன்னம்பர் ஈசனே"** **(5 - 135 - 1)**

**"சிவனவனென் சிந்தையுள் நின்றவதனால் .....**
**சிந்தைமகிழ சிவபுராணந்தன்னை... உரைப்பன்யான்"**
(திருவாசகம்)

**"என்நெஞ்சத்திருந்து அம்பலத்துநின்று புனைவித்த ஈசன்"**
(திருக்கோவையார்)

**"உரைகலந்துன்னை என்னுடை நாவினால் நவில்வான்"**
("தற்பரம்பொருளே" – திருமாளிகைத்தேவர்)

**"உருக்கி என்னுள்ளத்துள்ளே ஊறவந்தேறல் மாறா**
**திருக்குறிப்பு அருளும் தில்லைச்செல்வன்"**
("உருக்கி...." – திருமாளிகைத்தேவர்)

**"வேதமோ டாகமம் மெய்யாம் இறைவன்நூல்"**
(திருமந்திரம் 2358)

திருமுறைப்பாடல்களில் தேவாரங்கள் பாடிய மூவரது பாடல்களின் எண்ணிக்கை பற்றிய தகவல்களை, திருமுறை கண்ட புராணம் தருகின்றது.

| | |
|---|---|
| திருஞானசம்பந்தர் பாடிய மொத்தத் திருப்பதிகங்கள் | 16,000 |
| திருநாவுக்கரசர் பாடிய மொத்தத் திருப்பதிகங்கள் | 49,000 |
| சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய மொத்தத் திருப்பதிகங்கள் | 38,000 |

திருநாவுக்கரசர் பாடிய திருப்பதிகங்களின் தொகை 49120 என, சுந்தரமூர்த்திகளின் திருநின்றியூர்ப்பதிகத்தின் இரண்டாவது பாடலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

**"இணைகெ ளேழெழு நூறிரும் பனுவ**
**லீன்ற வன்றிரு நாவினுக் கரையன்"** (7-65-2)

இத்தனை திருமுறைப்பனுவல்களில், கறையானால் அழிக்கப்பட்டவை போக, மீதிப் பனுவல்களையே நம்பியாண்டார் நம்பி அடிகள், ஏழு திருமுறைகளாக வகுத்தார். இவர் வகுத்த முதல் ஏழு திருமுறைகளில் அடங்கும் பதிக எண்ணிக்கை களை, திருமுறை கண்டபுராணத்தின் 25வது பாடல் கூறுகின்றது.

**"பண்புற்ற திருஞான சம்பந்தர் பதிகமுந்நூற்**
**றெண்பத்தி னான்கினா லிலங்குதிரு முறைமூன்று**
**நண்புற்ற நாவரசர் முன்னூற்றேழ் மூன்றினால்**
**வண்பெற்ற முறையொன்று நூற்றினால் வன்றொண்டர்"**

ஏனைய திருமுறைகள் பற்றி, திருமுறை கண்ட புராணத்தின் 26-27வது பாடல்கள் எடுத்தியம்பும்.

முத்திக்கு வழிகாட்டும் கருவூலமாகவும், எமது கன்ம வினைகளை அகற்றும் ஒளியாகவும் விளங்கும் திருமுறைப் பாடல்கள், சிவானுபூதிபெற்ற ஆசாரசீலர்களால் இறைவனைப் போற்றி அர்ச்சித்து பாடப்பட்ட அற்புதப் பாடல்களாகவும் வாழ்க்கையில் இறைவனைப் போற்றிப் பாடுவதையே செல்வ மாகவும், இன்பமாகவும் அனுபவ பூர்வமாக உணர்ந்ததாலேயே, இப்பாடல்கள் இன்றும் நன்னெறியைக் காட்டும் திருவருட் சக்தியை உடையதாய் விளங்குகின்றன.

**"செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே"** *(1-80-5)*
**"தமிழோடிசைபாடல் மறந்தறியேன்"** *(4-1-1)*

இறைவனது திருப்புகழை, திருக்கோலத்தை, திருத்தல மகிமைகளை, தமது தீந்தமிழால் - கெஞ்சுதமிழால் - கொஞ்சு தமிழால் இசைப்பாடல்களாகப் புனைந்து, அவர்கள் வாழ்ந்த காலத்தின் தமிழின் இன்சுவைக்கேற்ற கவிதை நடை — சந்தபேதங்கள் - பண் வண்ணம் என்பவற்றிற்கமைவானதாக அமைத்து, வாழ்க்கையின் நன்னெறிக்கான இறைசிந்தனைகளை அருளாளர்கள் காட்டியுள்ளார்கள்.

அருள் ஒளியைக் கொடுக்கும் இப்பாடல்களில், இறை வனை தந்தை — தாயாக, குருவாக, தோழனாக, தலைவ னாகக் கருதி முப்பொருள் உண்மைகளையும், வாழ்க்கையின் நிலையாமையையும், இறைவனின் ஒப்பற்ற சிறப்புக்களையும் கூறப்பட்டிருத்தல் சிறப்புடையதாகும். பாடல்கள் பலவற்றைக் கொண்ட இத்திருப்பதிகங்களில் அத்திருத்தலத்தின் இயற்கை அழகு — அற்புதங்கள் - இறைவன் இறைவியின் பெயர்கள் - தலமுத்திரை என்பவற்றை உள்ளடக்கியனவாக அமைந்துள்ளன.

திருமுறைகள் தந்த அருளாளர்கள் திருத்தலங்களுக்குத் தனியாகவும், அடியார் திருக்கூட்டத்துடனும் கால்நடையாகச் சென்று உள்ளமுருகி பாடி, வழிபடவேண்டிய முறைகளையும் கண்ட காட்சிகளையும் நமக்கு எடுத்துக்காட்டுகின்றனர். இறைவனது தூலசரீரமே மந்திரங்களாதலினால் அம்மந்திரங்களை ஆதாரமாகக் கொண்டு பாடிய இத்திருமுறைகள், ஆசாரசீலர் களாக முறைப்படி பண்ணுடன் பொருள் உணர்ந்து பாடும்போது, நாமும் திருவருட் சத்தியைப் பெறலாம். மந்திரங்கள் பிறர் காதிற் கேட்காதவாறு உச்சரித்தலும், தோத்திரங்களை யாவரும் கேட்குமாறு பண்வண்ணத்துடனும் நல்லிசைக்கருவிகளுடனும் பாடியாடுதலும் சிறப்புடையதாகும். இக்கருத்தை திருஞானசம்பந் தரின் தேவார விளக்கவுரையில் (3-291-7) குறிப்பிடுகின்றார்கள்.

“தோத்திரமும் சாத்திரமும் ஆனார்தாமே” என்று திருநாவுக் கரசர் “அல்லும் பகலும்” என்ற திருத்தாண்டகத்தில் கூறும் வரிகள் எம்மைச் சிந்திக்க வைக்கின்றது. இறைவன் திருவருட் பாடல்களிலும், ஞான – வேத – ஆகம சாஸ்திரங்களிலும் வியாபித் துள்ள தன்மை ஆழ்ந்து நோக்கற்பாலது.

## 2. திருமுறைகளும் ஓங்காரமும்

ஓம் என்ற ஓங்காரம் பிரணவமாகும். இது அகர – உகர – மகர – விந்து – நாதம் ஆகிய இறைவனது ஐந்தொழில்களையும் குறிக்கும். இதுவே மூன்றெழுத்து மந்திர மாகும். மறைமொழி வடிவமாக விளங்கும் "ஓம்" என்பதன் ஓசை அ – உ – ம் என்ற வடிவமாகும். "அ" என்பது எழுத்துத் தோற்றத்தையும், "ம்" என்பது ஒடுக்கத்தையும் குறிக்கும். இறைவன் ஓங்காரத்தின் உட்பொருள். மெய்ப்பொருளின் உருவம். அந்தணர்கள் வேதாகமங்களின் "ஓம்" என்ற பிரணவ மந்திரத்தை உச்சரித்தே ஓதுவதை நாம் காண்கின்றோம். இறைவன் "நமச்சிவாய" என்ற மந்திரத்தின் பொருளாயுள்ளான். அவன் நாதவடிவானவன். இந்த நாதவடிவம், 'ஓம்' என்ற ஒலி யில் அடங்குகின்றது. நாதத்தினின்றே ஏழிசையும் பிறக்கின்றது. திருமுறைகளில் வரும் ஓங்காரத் தகவல்கள் பின்வருமாறு.

| | |
|---|---|
| **"ஓமென்று மறை பயில்வார்"** | 2-176-2 |
| **"ஒன்றவேயுணர்திராகி லோங்காரத் தொருவனாகும்** | 4-23-9 |
| **"ஓங்காரத்தொருவன் காண்"** | 6-262-4 |
| **"ஓங்காரத்துட் பொருளை"** | 6-277-3 |
| **"ஓங்காரத்தொருவன் காண்"** | 6-279-1 |
| **"ஓங்கார மெய்ப்பொருளை"** | 6-300-3 |
| **"ஓங்காரத்துட் பொருளாயினான்"** | 6-281-7 |
| **"ஓ வண்ணம் ஏல்"** | 7-10-10 |
| **"உலகெலாம் ஓங்காரத்துருவாகி நின்றானன்"** | 7-67-1 |
| **"உய்யவென்னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற"** | சிவபுராணம் 33 |
| **"ஓங்காரத்துட் பொருளை"** | அச்சோபதிகம் 654 |
| **"போற்றி ஓம் நமச்சிவாய"** | திருச்சதகம் 62 |
| **"ஓங்காரத்துள்ளே யுதித்த பூதங்கள்"** | திருமந்திரம் 2628 |
| **"ஓமெனும் ஓங்காரத்துள்ளே ஒருமொழி தோன்றும்"** | திருமந்திரம் 2629 |

சிவஞான ஒழுக்கத்தில் நிற்கும் அந்தணர்கள், ஓதும் ஓங்காரத்தின் - கண், உகரம் பரமாகவும், அகரம் உயிராகவும் பொருள் கொள்வர்.

**"அந்தணர்கள் பார்பார் பரமுயிர் ஓரொன்றிரண்டினில் ஓங்காரம் ஓதியே"** (திருமந்திரம் 1617)

எனவேதான் திருநாவுக்கரசர் தமது பாடலிலே, தமது கருப்பொருளாக சிந்தையில் இருப்பதை,

**"அந்தணர்தம் சிந்தையானை"**

என்று கூறுகின்றார். ஓம் என்ற ஒலியின் நாதத்தில் ஏழிசை பிறந்து திருமுறைப் பாடல்களுக்கான பண் அமைவு ஏற்படுகிறது.

திருமுறைப்பாடல்கள் யாவும், "ஓம்" என்ற சொல்லில் அடங்கும். தோடுடைய செவியன் என்ற முதலாம் திருமுறையின் முதற்பாடல், "தோ" என்ற ஓங்காரத்தின் ஓசையைக் கொண்டது. இவ்வாறே பன்னிரண்டாந் திருமுறையின் இறுதிப்பாடலான "உலகெலாம்" என்ற பாடல் நிறைவுறும் சொல்லான "வணங்கு வாம்" என்பதில் "ம்" காரமும் ஒலித்தலைக் காணலாம்.

எனவே இவ்வரிய திருமுறைப் பாடல்களைப் பாடி பரவி செல்வன் கழலேத்தும் செல்வத்தைப் பெறவும், இறைகளோ டிசைந்த வின்பம், இன்பத்தோடிசைந்த வாழ்வு பெறவும் எமது ஐம்புலன்களை அடக்கி நல்வழிப்படுத்துவோம்.

# 3. திருமுறைகளும் ஓதுவார்களும்

திருமுறைகள் ஓதப்படும் மரபினை, தமிழ் நாடெங்கும் பரவுதற்கு தஞ்சைப் பெருங்கோயிலில் 48 ஓதுவாமூர்த்திகளை, சோழவரசனான இராசராசசோழன் நியமித்திருந்தான். இவர்கள் பண்ணுடன் திருமுறைகளை ஓதும்போது, கொட்டி மத்தளம் வாசிப்பதற்கு ஒருவரும், உடுக்கை வாசிப்பதற்கு ஒருவரும் நியமிக்கப்பட்டிருந்ததை அறியமுடிகின்றது.

திருமுறைகள் கண்டெடுக்கப்பட்டபின்னர், தேவாரங்களுக் கான பண் - கட்டளை முறைகளை, திருநீலகண்ட பெரும்பாணார் மரபில் வந்த பெண் ஒருவரே வகுத்தார். பொதுவாக ஒவ்வொரு பண்ணுக்குமுரிய பண் - கட்டளை பேதங்களை திருமுறைகண்ட புராணச்செய்யுள்கள் தருகின்றன. திருக்கோயில்களிலே பஞ்ச புராணம் பாடும் மரபு, விசேடமாக திருவிழாக்காலங்களிலே நவசந்திகளுக்குமான பண் - இராகம் - நாட்டியம் இசைக்கப் படும் மரபு, தீர்த்தோற்சவத்தில் "திருப்பொற்சுண்ணம்" பாடும் மரபு, மார்கழி மாதத்திலே திருப்பள்ளி எழுச்சி – திருவெம்பாவை – திருப்பாவை பாடும் மரபு இன்றும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

இறை சந்நிதானத்தில் திருமுறை ஓதுபவர்கள் சிவதீட்சை பெற்றவராய், விபூதி – உருத்திராக்க சிவசின்னங்கள் அணிந்தவ ராய் திருமுறை ஒழுங்கும், பண்முறையும் மாறாது பாடலின் பொருளுணர்ந்து உடற்குற்றம் - பாடுங்குற்றம் - சொற்குற்றம் இன்றி வடக்கு முகமாகவேனும், கிழக்கு முகமாகவேனும் நின்று கூப்பிய கைகளுடன் மெய்யன்புடன் ஆரம்பத்திலும் இறுதியிலும் "திருச்சிற்றம்பலம்" சொல்லி பாடுதல் வேண்டும். இவ்வாறு மெய் யன்புடன் ஓதுபவர்களை இறைவனாகவே கருதல் வேண்டும்.

**'இன்னிசையாற் பாடவல்லோரிரு நிலத்தி**
**லீச னென்னு மியல்பினோரே...'** (1-132-11)

திருநீறு உடல் முழுவதும் பூண்டு, உருத்திராக்கம் தலை, கை, கழுத்து அலங்கரிக்க, தலையில் சடைதரித்து உள்ள சிவ வேடப் பொலிவுள்ளவர்களை வணங்குதல், பூசித்தல் அவசியமாகும்.

உடல் - உள்ளம் - உடைச்சுத்தம், பாடற்பொருட்சுத்தம், பாடலுக்கமைவான பண் சுத்தம் என்பன அமைய, சிவபொலிவுக் கோலத்துடனான விபூதி - உருத்திராக்கம் அணிந்து பாடுபவர்கள் குற்றம் இல்லாதவர்களே.

**"ஞாலத்தான் மிக்கசீர் ஞானசம்பந்தன் சொல்**
**கோலத்தாற் பாடுவார் குற்றம் அற்றார்களே"** (3-286-11)

**"இனமலிந்திசை பாடவல்லார்கள் போ**
**யிறைவனோ குறைவாரே"** (2-240-11)

ஓதுதல் உணர்ந்த அடியவர்கள், இறைவனது பெருமை களை நினைந்து, உள்ளம் உருகி, பண்ணின் வண்ணங்களுக் கேற்பவும் பாடலின் சந்தங்களுக்குரிய கட்டளை பேதங்களுக் கமைவான தாளத்துடன் பாடும் தோத்திரங்களில் சிவபெருமான் நிறைந்திருப்பார். அவன் பாதமடைதலே நற்கதியாகும்.

**"ஓதலுணர்ந்தடியார் உன்பெருமைக்கு நினைந்**
**துள்ளுருக காவிரசும் ஓசைப் பாடலும் நீ"** (7-84-2)

**"நற்பதமென்றுணர்வார் பொற்பதமார் சிவனை"** (7-84-3)

இவ்வருட் பாடல்களை முறையாக ஓதுவோரும் கேட் போரும் நற்கதியடைவார்கள். ஆம், பண்ணிசையால் வழிபடு வோர் உள்ளத்தில் இறைவன் உறைகின்றான். இவர்களின்

பாவங்கள் நீங்குவதுடன், மண்ணும் விண்ணும் போற்றித் துதிக்க சிவபதமடைவர்.

"பண்ணியல் பாடல் வல்லார்கள் பழியொடுபாவமிலரே" (1-39-11)

"யாழின்னிசை வல்லார்சொலக் கேட்டவரெல்லாம்
ஊழின்மலி வினைபோயிட வுயர்வானடைவாரே" (1-11-11)

"இசைவரவிட்டு இயல்கேட்பித்து கல்லவடமிட்டு
திசைதொழு தாடியும் பாடியுள்ளார் சிந்தையுட் சேர்வாரே" (3-267-6)

"பண்ணிற் பாடல்கள் பத்திசெய் வித்தகர்க்கு
அண்ணித் தாகும் அமுதினை" (5-158-8)

"மண்ணுலகிற் பிறந்து நும்மை வாழ்த்தும் வழியடியார்கள்
பொன்னுலகம் பெறுதல் தொண்டனேன் இன்று கண்டொழிந்தேன்"
(7-100-5)

எனவே நாம் திருமுறைப் பாடல்களை, பிழையின்றி பண்முறைப்படி ஆசாரத்துடன் ஓதி பேரின்பமடைவோம்.

"ஊனமின்றி உரைசெய வல்லவர் தாம்போய்
வானநா டினிதாள்வர் இம்மா நிலத்தோரே" (2-174-11)

# 4. திருமுறைகளும் பண்களும்

சங்க காலத்தில் நில இயல்புகளுக்கேற்ப, அந்நிலங்களுக்குரிய பண் - யாழ் - பறை – மக்கள் என்ற பிரிவுகள் தனித்தனியாக இருந்துள்ளன.

| நிலம் | மக்கட்பிரிவு | யாழ் | பண் | பறை |
|---|---|---|---|---|
| குறிஞ்சி | குறவர் | குறிஞ்சி | குறிஞ்சி | தொண்டகம் |
| பாலை | வேடர் | பாலை | பஞ்சுரம் | நிரைகோட்பறை |
| நெய்தல் | பரதர் | விளரி | செவ்வழி | மீன்கோட்பறை |
| முல்லை | இடையர் | முல்லை | சாதாரி | ஏறுகோட்பறை |
| மருதம் | உழவர் | மருதம் | மருதம் | கிணை |

பண்டைய இலக்கியங்களிலே ஆம்பல், காஞ்சி, காமரம், குறிஞ்சி, செவ்வழி, பஞ்சுரம், பாலை, மருதம், விளரி என பலவகையில் பண்கள் இடம்பெற்றுள்ளன. இப்பண்களில் காலை – மாலை – முன்னிரவு – நள்ளிரவு என ஒரு நாளின் வெவ்வேறு காலத்துக்கேற்பவும், ஏக்கம், இன்பம், இரக்கம், அச்சம் ஆகிய உணர்வுகளுக்கேற்பவும் உரிய பாடல்கள் பாடப்பட்டு வந்தன.

ஆதியிசைகள் 11, 991 இருந்தமையும், பண்கள் 103 இருந்தமையும் சிலப்பதிகாரத்தின் அரங்கேற்றுக்காதை விளக்கவுரையில் நாம் காண்கின்றோம். ஆனால் தேவார – திவ்ய பிரபந்த காலத்தில். வழக்கத்திலிருந்த 103 பண்களில் 23 பண்கள் பயன்படுத்தப்பட்டன. திருநீலகண்டபெரும் பாணர் மரபில் வந்த பெண்மணியே இறையருளால் திருமுறைகள் கண்டெடுக்கப்பட்டபின் பண்களை வகுத்துள்ளார் என்பதை, திருமுறை கண்டபுராணம் (பாடல் 32) மூலம் நாம் அறிகின்றோம்.

“நல்லிசையாழ்ப் பாணனார் நன்மரபில் வழிவந்த
வல்லியொருத் திக்கிசைகள் வாய்ப்பவளித் தோமென்று
சொல்லலவ டனையழைத்துச் சுருதிவழிப் பண்டழுவு
நல்லிசையின் வழிகேட்டு நம்பியிறை யுண்மகிழ்ந்தார்”

திருமுறைகளில் தேவாரப் பாடல்களுக்கான கட்டளை பேதங்களும் திருமுறை கண்டபுராணப்பாடல்கள் 35 முதல் 43 வரை தரப்பட்டுள்ளன. இத்திருமுறையாசிரியர்களில் காரைக் காலம்மையாரே தமிழிசையின் முன்னோடியாக விளங்குகின்றார். இவரது பாடல்களில் நட்டபாடை, இந்தளம் ஆகிய இரண்டு பண்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவரது பாடலொன்றில், இறைவனது நடனமாடும் அழகை வர்ணிக்கும்போது, ஏழிசை யோசையுடன் பல்வேறு வாத்திய ஒலிகள் சேர்ந்தொலிப்பதை நாம் காணலாம்.

“துத்தம் கைக்கிளை விளரி தாரமுழை
யிளியோசை பண் கெழுமப் பாடி
சச்சரி கொக்கரை தக்கை யொடு
தகுணிதந் துந்துபி தாளம்வீணை
மத்தளங் கரடிகை வன்மை மென்றோல்
தமருகங் குடமுழா மொந்தை வாசித்
தத்தனை விரவினோ டாடு மெங்கள்
அப்பனிடந் திருவாலங் காடே”

தேவார முதலிகளுள் வயதிற் குறைந்த திருஞானசம்பந்தர், தனது “கஞ்சத்தேனுண்டிட்டே” என்ற பாடலொன்றில், 21 இசைகள் இருப்பதையே குறிப்பிடுகின்றார்.

“ஏழேயேழே நாலேமூன் றியலிசை யிசையியல்பா”
(1 – 126 – 11)

திருமுறைப்பாடல்கள் சில சுத்தாங்கமாகவும், இலயாங்க மாகவும் பொதுவாக பண்கள் பாடப்படும். இருப்பினும் தேவாரத் திருமுறைகளுக்கு பண்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. தற்போதைய பண்முறையில் பகற்பண்கள், இரவுப் பண்கள், பொதுப் பண்கள் என்பன உண்டு.

| பகற்பண் (இராகம்) | இரவுப்பண் (இராகம்) | பொதுப்பண் (இராகம்) |
|---|---|---|
| நட்டபாடை (கம்பீரநாட்டை) | தக்கராகம் (காம்போதி) | செவ்வழி (யதுகுல காம்போதி) |
| தக்கேசி (காம்போதி) | பழந்தக்கராகம் (ஆரபி) | |
| இந்தளம் (மாயாமாளவகௌளை) | குறிஞ்சி (அரிகாம்போதி) | திருத்தாண்டகம் (அரிகாம்போதி) |
| நட்டராகம் (பந்துவராளி) | மேகராகக்குறிஞ்சி (நீலாம்பரி) | |
| காந்தாரம் (நவரோஸ்) | வியாழக்குறிஞ்சி (சௌராட்சரம்) | செந்துருத்தி (மத்தியமாவதி) |
| பியந்தைக்காந்தாரம் (நவரோஸ்) | | |
| காந்தாரபஞ்சமம் (கேதாரகௌளை) | சீகாமரம் (நாதநாமக்கிரியை) | |
| கௌசிகம் (பைரவி) | கொல்லி (நவரோஸ்) | |
| பஞ்சமம் (ஆகிரி) | அந்தாளிக்குறிஞ்சி (சாமா) | யாழ்முரி (அடாணா) |
| சாதாரி (பந்துவராளி) | திருநேரிசை (கொல்லி) | |
| பழம்பஞ்சுரம் (சங்கராபரணம்) | திருவிருத்தம் (விரும்பிய ராகம்) | |
| புறநீர்மை (பூபாளம்) | | |
| திருக்குறுந்தொகை | கொல்லிக்கௌவாணம் (நவரோஸ்) | |

பன்னிரு திருமுறைகளையும், திருமுறைகள் அமைக்கப் பட்ட ஒழுங்கில் பாடுதல் அவசியம். இருப்பினும் பஞ்சபுராணம் பாடும்போதும் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல் லாண்டு, திருத்தொண்டர் பெரிய புராணம் ஒழுங்கில் பாடல்கள் பாடப்படும்.

பொதுவாக தேவாரத் திருப்பதிகங்கள் பாடும்போது, ஒவ்வொரு திருப்பதிகத்தின் முதல் பாடல் முதல், திருக்கடைக் காப்பு இறுதிப்பாடல் வரை பாடப்பட்டாலேயே, அப்பாடல்களின் பயன்கள் எம்மை வந்து சேரும். திருக்கடைக் காப்பான இறுதிப்

பாடலில் அப்பதிகப்பாடல்களின் ஆசிரியரின் சிறப்பும் இறைவனின் சிறப்பும் கூறப்படுவதுடன் பதிகப்பாடல்கள் முழுவதும் ஓதப்படுவதால் நமக்குக் கிட்டும் நன்மைகளும் எடுத்துரைக்கப்பட்டிருக்கும்.

தேவாரம் பாடிய மூவருள், திருஞானசம்பந்தரின் பாடல்களில் அமைந்துள்ள சிறப்பியல்புகள் சிலவற்றை நோக்குவோம்.

"இயலிசைத்தலைவன்" என சேக்கிழார் போற்றும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரின் பண்ணியற் பாடல்கள் கவித்துவம் மிக்கன. இவரது பாடல்களில் மொழிமாற்றம், மாலைமாற்று, யமகம், ஏகபாதம், திருஎழுகூற்றிருக்கை, நாலடி மேல்வைப்பு, சக்கரமாற்று, ஈரடிமேல்வைப்பு எனப் பல்வேறுபட்ட அமைப்புக்களைக் காணலாம்.

**"செந்தமிழ்மா லைவிகற்ப செய்யுட்களான மொழிமாற்று**
**வந்தசொற்சீர் மாலைமாற்று வழிமொழியெல் லாமடக்குச்**
**சந்தவியமக மேகபாதந் தமிழருக்குக் குறள்சாத்தி**
**யெந்தைக்கெழு கூற்றிருக்கை யீரடியீ ரடிவைப்பு"**

(திருமுறைகண்டபுராணம் 276)

**நாலடிமேல் வைப்புமேன்மை நடையின்முடு குமிராகஞ்**
**சால்பினிற்சக் கரமாதி விகற்பங்கள்சாற் றும்பதிக**
**மூலவிலக் கியமாக வெல்லாப்பொருள் களுமுற்ற**
**ஞாலத்துயர் காழியாரைப் பாடினார் ஞானசம்பந்தர்.**

(திருமுறைகண்டபுராணம் 277)

இத்தனை சிறப்புமிக்க கட்டளை பேதங்கள், பண் முறைகள் அமையப்பெற்ற திருஞானசம்பந்தரின் பாடல்களை, யாழ்ப்பெரும்பாணராம் திருநீலகண்ட யாழ்ப்பாணரும், இசைவடிவான மதங்கசூளாமணியாரும் அடியார்களுடன் பாடிவர, பொன்னாற் செய்யப்பட்ட திருத்தாளத்தை திருஞானசம்பந்தர்

இறைவனிடம் பெற்றுக் கொண்டார். இவரது பண் வண்ணப் பாடல்களை, திருநீலகண்ட யாழ்ப்பாணனானர் யாழில் வாசிக்க, அடியார்களும் சேர்ந்துபாட ஏட்டினிலும் பாடற்பதிவுகள் எழுதப் பட்டன. பண்முறைகளும் நிலைநாட்டப்பட்டன.

**இன்னிசை பாடின வெல்லாம் யாழ்ப்பெரும்பா ணனார்தாமு**

**மன்னுமிசை வடிவான மதங்கசூளா மணியாரும்**

**பன்னியவே ழிசைபற்றிப் பாடப்பதி கங்கள்பாடிப்**

**பொன்னின்றிருத் தாளம்பெற்றார் புகலியிற்போ ற்றிருந்தார்.**

(திருமுறைகண்டபுராணம் 278)

கூடிய பண்களிலும், கூடிய கட்டளை பேதங்களிலும் பதிகங்கள் இயற்றிய திருஞானசம்பந்தரின் பாடல்கள் பண்ணீர் மையையும், சைவநெறியையும் உலகிற் பரவச்செய்ததுடன் பல இறைவனின் அற்புத நிகழ்வுகளையும் நிகழ்த்த காரணமாக இருந்தன. இலக்கிய நயம்மிக்க இயற்கை வளங்களை குறிப் பிடும் இவரது பாடல்களில் இறைவனது உருவத்தையும், திருவிளையாடல்களையும், பெருமைகளையும் அழகாகக் குறிப்பிடுவதை நாம் காணலாம்.

பொதுவாக இவரது பதிகங்களில் உள்ள பதினொரு பாடல்களில் முதல் ஏழு பாடல்களில் இறைவனின் பெருமை களையும் உருவச் சிறப்பினையும், இயற்கை வளங்களையும் குறிப்பிடுகின்ற அதேவேளையில் 8வது பாடலில் இராவணனின் கைலை மலையைப் பெயர்த்து இசைபாட, அருள்பெற்ற வரலாறும், 9வது பாடலில் திருமாலும் பிரமனும் அடிமுடி தேடிய வரலாறும், 10வது பாடலில் சமணரின் இழிவையும் 11வது பாடலில் தமிழ் மாலையாகச் சாத்தும் பதிகத்தை பரிந்துபாட இறை அருள் கிடைக்கும் என்ற நம்பிக்கையையும் தருவார்.

**"பண்பொலி செந்தமிழ்மாலை பாடிய பத்திவைவல்லார்**

**மண்பொலிய வாழ்ந்தவர் போய் வான்பொலியப் புகுவாரே"**

(2-184 – 11)

இவரது பண்வண்ணப் பாடல்களில் "யாழ்முரி" என்னும் பண்ணில் "மாதர்மடப்பிடியும்" என்ற முதற்பாடல் அமைந்த பதிகத்தை இசையுடன் பாடியபொழுது, அவ்விசைப்பாடலை யாழில் மீட்டிட , முடியாமல் திருநீலகண்ட யாழ்ப்பாணர் திணறும்போது, அப்பண்ணின் பெருமையை எண்ணி வானவரும் வணங்கினர்.

**"பூதலத்தோர் கண்டதுங் கலத்தினிலு நிலத்து நூல் புகன்றபேத**
**நாதவிசை முயற்சிகளா லடங்காத வகைகாட்ட நாட்டுகின்றார்**
**மாதர்மடப்பிடிபாடி வணங்கினார் வானவரும் வணங்கி ஏத்த"**

(திருமுறைகண்டபுராணம் 447)

பொதுவாக பண்ணிசைப் பதிகங்களைத் தாளத்துடன் பாடும் இவர் வெவ்வேறு நடைகளிலமைந்த சந்தங்கள் அமையும் பாடல்களை பாடியுள்ளார்.

**"எடுத்ததிருப் பதிகத்தி னிசைதிருத்தாளத்தினா லிசையவொற்றி**
**யடுத்தநடை பெறப்பாடி யார்வமுறவணங்கி..."**

(திருமுறைகண்டபுராணம் 108)

**'சந்தமெல்லாம் அடிச்சாத்தவல்ல மறைஞானசம்பந்தன் செந்தமிழ்'**

(3-226-11)

தமிழிசையின் தூயவடிவத்தைத் தந்த திருஞானசம்பந்தர், தேனிசை வண்டுகள் பண்பாடும் நுண்ணறிவை, பாடல்ககள் பலவற்றில் குறிப்பிடுவார். இசையிலக்கணத்திற்கும் பாவிலக்கணத்திற்கும் அமையும் வண்ணம் பாடிய இவரது தமிழ் வேதப் பாடல்களை, பாடும் அடியவர்கள், கேட்பவர்கள் யாவரும் சிவபதமடைவர். பாடிப் பரவிப் பணிவோர் வாழ்க்கையில் இன்ப – துன்பங்கள் தொடர்ந்தாலும் இசையைக் கற்றுணர்ந்து இறைவனைப்போற்றுதலே, வாழ்க்கையின் தலையாய நற்பேறாகும்.

**"ஏழிசையின்பொருள் வாழும் வாழ்க்கை வினையின் புணர்ப்பாகி"**

(3-365-7)

தேவாரத் திருப்பதிகங்களுக்கு பண்முறை வகுக்கப்பட்டுள்ள தேவாரப் பண்களில் திருவாசகம் பாடப்படுவதில்லை. மாறாக முல்லைப்பண்ணான மோகனத்தில் பாடும் வழமை பண்டுதொட்டு நிலவி வருகின்றது. அடுத்துவரும் திருவிசைப்பா பாடல்களுக்கு பண்களாக பஞ்சமம், காந்தாரம், புறநீர்மை, சாளரபாணி, நட்டராகம் ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளன. திருவிசைப்பா தந்த 9 நாயன்மார்களின் பண்வகை பற்றிய பாடல் பின்வருமாறு.

"ஐந்து டனால் வருமுரைத்த திருக்கடைக் காப்பிற்பண்
ணறையின் மாளிகைத்தேவர் நான்கிலொன்று காந்தார
முந்து கருவூரர் பத்திரண்டு **புறநீர்மை**
மொழிந்திடு **காந்தார**மொன்று காடவர் கோனிரண்டி
னந்தலில் **சாளரபாணி** யொன்று வேணாட்டடிக
ணவின்ற தொன்று **புறநீர்மை** திருவாலியமுதர்
பந்தமறச் சொன்னான் கினொன்று **நட்டராகம்**
பகர்ந்திடி னொன்றிந்தள மற்றெவையும் **பஞ்சமமே**"

திருப்பல்லாண்டு பாடல்கள் யாவும், பண் பஞ்சமத்திலேயே பாடுதல் வேண்டும். திருத்தொண்டர் புராணப்படல்கள் மத்தியமாவதி இராகத்தில் (பண் - செந்துருத்தி) பாடப்பட்டு வருகின்றது.

இத்தகைய பெருமைமிக்க பண்ணியற் பனுவல்கள் பண்ணாரின் தமிழாக, பண்ணிடைத் தமிழாக, ஆரியந்தமிழோடிசையாக இறைவனை வணங்க வழிசமைக்கின்றது.

**"ஆரியந்தமிழோடிசையானவன்"** (5-132-3)

**"பண்ணாரின் தமிழானாய்"** (7-24-5)

**"பண்ணிடைத் தமிழொப்பாய்"** (7-29-6)

பண்ணின் வடிவமாக காணும் இறைவனை திருமுறைகள் பாடி சிவகதி பெறுவோம்.

**"சிவகதி கூடலாந் திருக்கோளிலி ஈசனை**
**பாடுமின் இரவோடு பகலுமே"** (5-170-9)

**"சிவசிவ என்றிடச் சிவகதி தானே"** (திருமந்திரம்)

**"கீதத்தை மிகப்பாடு மடியவர்க்கென்றுங்**
**கேடிலா வானுலகங் கொடுத்த நாளோ"** (6-247-8)

இறைவன் பண்ணிசை வடிவமாகவும், பண்களின் வண்ண மாக பாடல்களைப் பாடுதலால் அப்பயன்கள் தரும் வல்லமையைக் கொண்டவனும் அவனே.

**"பண்ணவனை பண்ணில் வரு பயனானவனை"** (6-274-6)

எண்ணற்ற பண் வண்ணங்கள் மூலம், பஞ்சபிரம மந்திரங்களுடன், அங்க மந்திரம் ஒன்றையும் கொண்ட ஆறு மந்திரத்தை, ஏழு ஸ்வரங்களுடன் கூடிவரும் பாடல்கள் வடிவத் தையுடையவன் இறைவனே.

**"அஞ்சுடரொ டாறுபத மேழினிசை**
**யெண்ணரிய வண்ண முளவாய்"** (3-329-6)

மேற்படி பாடல்களை தாள விகற்பத்துடன் பாடுவதும் எழிலுடையது. அவ்வாறு மகிழ்ந்து பாடுவதும் வண்ணமே.

பண் என்பது, எமது சாரீர வீணையில், பெருந்தானமாம் நெஞ்சு - மிடறு - நாக்கு - மூக்கு - அண்ணம் - உதடு - பல் - தலை ஆகிய 8 உறுப்புகளால் செய்யப்படும் 8 வகைத் தொழிற்பாடான எடுத்தல் - படுத்தல் - நலிதல் - கம்பிதம் - குடிலம் - ஒலி – உருட்டு – தாக்கு என்பவற்றால் உண்டாகும் ஓசையாகும். இவை தாளத்துடனோ தாளமின்றியோ பாடப்படும்.

பாடல்களின் சந்தங்களுக்குரிய சீரின்படி, கட்டளை பேதம் மாறுவதால் 9 விதமான நடைகளை நாம் நோக்க முடியும்.

1. தவளைத்தத்து - இடைவிட்டு தத்திச் செல்வது. (உதாரணம் - தோடுடைய செவியன்)

2. இடபநடை - இருபுறமும் தலையசைத்து கம்பீரமாக செல்வது. (உதாரணம் - தலையே நீ வணங்காய்)

3. மயில்நடை – தலையையும், கழுத்தையும் அசைத்தும் உள்ளிழுத்தும் நீட்டியும் நடப்பது. (உதாரணம் - நத்தார் படை ஞானன்பசு)

4. குக்கிடநடை – அடிக்கடி தலையை தாழ்த்தியும் உயர்த்தியும் நடப்பது. (உதாரணம் - காதலாகிக் கசிந்து)

5. அரவினோட்டம் - உடலைநெளித்து, தலையை இருபுறமும் வளைத்து ஓடுவது. (உதாரணம் - வேயுறுதோளி பங்கன்)

6. அன்னநடை – அமைதியாக அழகுடன் நடப்பது (உதாரணம் - மந்திரமாவது நீறு)

7. பிடி நடை – பெண்யானை தன்முன்கால்களை சிறிது விரைவாகவும் பின்கால்களை ஆறுதலாகவும் வைத்து குலுக்கி சொகுசாக நடப்பது. (உதாரணம் - மானினேர்விழி மாதராய்)

8. பாற்றியக்கம் - பருந்து ஒரே இடத்தில் சுழன்று திரிந்தாலும் நின்றும் - மேலுயர்ந்தும், திடீரெனத் தாழ்ந்தும் இயங்கும். (உதாரணம் - சொற்றுணை வேதியன்)

9. ஆற்றொழுக்கு – ஒரே விதத்தில் தாள ஒலியுடன் செல்வது. (உதாரணம் - உற்றுமை சேர்வது மெய்யினையே)

# 5. திருமுறைகளின் தொகுப்புக்கள்

தேவாரத் திருமுறைகள் யாவும் பண்முறையாகவும், தல முறையாகவும் தொகுக்கப்பட்டுள்ளன. நம்பியாண்டார் நம்பி வகுத்த திருமுறைகள் ஏழும் **அடங்கன்முறை** எனப்படும்.

சிவாலய முனிவருக்காக அகத்திய முனிவரால் தொகுக் கப்பட்ட 25 பதிகங்களை மட்டும் உள்ளடக்கிய தொகுப்பு அகத்தியர் **தோத்திரத்திரட்டு** என அழைக்கப்படும்.

தேவாரத் திருமுறைகளுள், திருவருட் பயன் நூற்பாடல் கள் ஒழுங்கமையை தொகுக்கப்பட்ட 99 தேவாரங்கள் **தேவார அருண்முறைத்திரட்டு** எனப்படும்.

தேவார முதலிகள் செய்த அற்புதங்களை உள்ளடக்கிய தொகுப்பு அற்புதத்தேவாரத்திரட்டு எனப்படும்.

பொதுவாகத் திருமுறைகளில் குருவருள் - வெண்ணீறு – அஞ்செழுத்து என்பவற்றின் பெருமைகளையும், இறைவனின் உருவம் - அழகு – குணம் - புகழ் - அடியார்க்கெளியனாகும் பாங்கு என்பவற்றையும், வழிபாட்டு முறைகளையும் அழகாக அருளாளர்கள் குறிப்பிடுவர். அகத்தியனாரின் தேவாரத்திரட்டில் தேவாரங்களில் உள்ள பொருள் பற்றி குறிப்பிடும் பாடல் பின்வருமாறு.

**"குருவருளும் வெண்ணீ றெழுத்தஞ்சங் கோயி**
**லரனுருவு மென்றலைமே லாக்குந் - திருவடியுஞ்**
**சிட்டான வர்ச்சனையுந் தொண்டுந் சிவால யர்க்கென்**
**றிட்டா ரகத்தியனா ரெட்டு"**

இறையருளால் அருளாளர்களால் வெளிப்படுத்தப்பட்ட திருமுறைகளை முறைப்படி வழிதலும், திருமுறையாளர்களின் திருநாளில் (குருபூசை தினத்தில்) விசேட வழிபாடுகள் செய்தலும் மிகச் சிறந்ததாகும். இதற்கு முன்னோடியாக, அன்று அநபாய சோழமகாராசன், திருமுறைகளை யானையின்மீது வைத்து பவனி வரச்செய்து, தாமே சாமரை வீசியதை சேக்கிழார் புராணத்தில் உமாபதிசிவாச்சாரியார் அழகாக எடுத்துச் செல்கிறார்.

**செறிமதயா னைச்சிரத்திற் பொற்கலத்தோ டெடுத்துத்**
**திருமுறையை யிருத்தியபின் சேவையர் காலவரை**
**முறைமைபெற வேற்றியர சனுங்கூட வேறிமுறைமையினா**
**லிணைக்கவரி துணைக்கரத்தால் வீச**
**மறைமுழங்க விண்ணவர்கள் கற்பகப்பூ**
**மாரிமழை பொழியத் திருவீதி வலமாக வரும்போ**
**திறைவர்திரு வருளைநினைந் தாடலரசர் கோமா**
**னிதுவன்றோ நான்செய்த தவப்பயனென் றிசைத்தான்**

(பாடல் 87)

## தேவாரத் திருப்பதிகங்களில் பண்களில் வகுக்கப்பட்டுள்ள கட்டளை, பதிகங்களின் விபரம்

| பண் விபரம் | மொத்தக் கட்டளைகள் | திருமுறைகளில் அடங்கியுள்ள பதிகங்கள் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| நட்டபாடை | 10 | 22 | | | | | | 5 |
| தக்கராகம் | 9 | 24 | | | | | | 4 |
| பழம்தக்கராகம் | 4 | 16 | | | 2 | | | |
| தக்கேசி | 8 | 12 | | | | | | 17 |
| குறிஞ்சி | 8 | 29 | | | 1 | | | 4 |
| வியாழக்குறிஞ்சி | 6 | 25 | | | | | | |
| மேகராகக்குறிஞ்சி | 2 | 7 | | | | | | |
| யாழ்முரி | 1 | 1 | | | | | | |
| இந்தளம் | 7 | | 39 | | 3 | | | 12 |
| சீகாமரம் | 4 | | 14 | | 2 | | | 4 |
| காந்தாரம் | 5 | | 29 | | 6 | | | 5 |
| பியந்தைக்காந்தாரம் | 4 | | 14 | | 1 | | | 1 |
| நட்டராகம் | 4 | | 16 | | | | | 14 |
| செவ்வழி | 1 | | 10 | | | | | |
| காந்தாரபஞ்சமம் | 4 | | | 23 | 2 | | | 1 |
| கொல்லி | 9 | | | 18 | 1 | | | 7 |
| கொல்லிக் கௌவாணம் | 3 | | | 1 | | | | 9 |
| கௌசிகம் | 4 | | | 14 | | | | 1 |
| பஞ்சமம் | 2 | | | 11 | | | | 5 |
| சாதாரி | 10 | | | 33 | 1 | | | |
| பழம்பஞ்சுரம் | 5 | | | 18 | 2 | | | 7 |
| புறநீர்மை | 3 | | | 6 | | | | 3 |
| அந்தாளிக்குறிஞ்சி | 1 | | | 2 | | | | |
| திருநேரிசை | 2 | | | | 58 | | | |
| திருவிருத்தம் | 1 | | | | 35 | | | |
| திருக்குறுந்தொகை | 1 | | | | | 100 | 99 | |
| திருத்தாண்டகம் | 1 | | | | | | | |
| செந்துருத்தி | 1 | | | | | | | 1 |
| மொத்தம் | **120** | **136** | **122** | **126** | **114** | **100** | **99** | **100** |

# 6. திருமுறைகள் காட்டும் உருவத் திருமேனி கொள்ளும் சிவனின் வடிவங்கள்

இறைவன் பல உருவங்களை தேவைக்கேற்ப எடுத்து அருள்புரிவான் "பலபல வேடமாகும் பரனாரிபாகன்" (2-221-9)

1. சந்திரசேகரர்: தக்கனின் சாபத்தால் கலைகள் தேய்ந்த சந்திரன் சிவனருள்பெற்று திருச்சடையில் இடம் பெற்றது.

"குறைவதாய குளிர்திங்கள்சூடி" (2-253-6)

"சந்திரசேகரனே யருவாயென்று தண்விசும்பில்" (3-318-3)

2. உமாமகேசர் :ஆன்மாக்களுக்கு போகத்தை ஊட்ட, தமது அருளை சக்தியாக்கி இடப்பாகத்திலமர்த்தியது.

"மலைமலிமங்கைபாகம் மகிழ்ந்தானெழில் வையமுள்ள" (3-320-7)

"பெண்பால் உகத்திலனேற் பேதாய் இருநிலத்தோர்
விண்பாலி யோகெய்தி விடுவர்காண் சாழலோ" (திருவாசகம்)

3. இடபாரூடர்: அன்பு, மெய்யுணர்வைக் கொடுத்து, இறவாத் தன்மையைப் பெற்ற திருமால், விடையாகி வாகனமானான்.

"கொடியுயர் மால்விடையூர்தியினான்" (3-272-11)
செங்கண் மால் விடைமேற் றிகழ் வானன் (7-61-3)
வேதமால் விடை ஏறவல்லானன்" (7-56-3)
"போக மாம் மன்னவன் திருமால்" – (5-173-8)

4. சபாபதி : ஆன்மாக்களின் மலம்நீங்க, பஞ்சாக்கரத் திருமேனி யுடன் உமைகாண பஞ்சகிருத்திய நடமாடியது.

"ஊன்நோயும் வெண் மழுவு மனலு மேந்தியுமைகாண
மீன்றோயுந் திசைநிறைய வோங்கியாரும் வேடத்தீர்" (2-193-7)

5. கல்யாண சுந்தரேசர் : ஆன்மாக்கள் போகமோட்சமடைய மலையரசன் புதல்வியை திருமணஞ் செய்தது.

"குரும்பைமுலை மலர்க்குழலி கொண்டதவங் கண்டு
குறிப்பினொடு சென்றவள்டன் குணத்தினை நன்கறிந்து
விரும்பும் வரங்கொடுத்தவளை வேட்டருளிச்செய்த
விண்ணவர்கோன்" (7-16-1)

6. பிட்சாடனர் : தாருகா வனத்து முனிவர்களின் கர்வமடக்கியது.

"வெண்டலையோர் கலனாப் பலிதேர்ந்து" (2-256-2)

பலியெதிர் கொணர்ந்து பெய்யவாடல் வெண்டலை பிடித்து
வரானீர்" (2-247-10)

7. காமாரி : காமனை நெற்றிக்கண்ணால் எரித்தது

"கண்ணிற் கனலாலே காமன் பொடியாக
பெண்ணுக்கருள் செய்த பெருமான்" (1-82-5)

8. காலாரி : மார்க்கண்டேயரைக் காப்பாற்ற காலனை அடக்கியது.

"காலகாலர்" (2-143-2)

"காலகாலர்" (5-152-3)

"வந்தகாலன்றன் ஆருயிர்தனை வவ்வினான்" (7-55-1)

9. திரிபுராரி :தாரகாக்கன் - கமலாக்கன் - வித்தியுன் மாலி ஆகிய அரக்கர் மூவரையும் அடக்கியது"

"எண்ணுடை மூவரிராக்கதர்கள்" (திருவாசகம்)

10. சலந்தராரி : சலந்தராசுரனைச் சக்கரத்தால் அழித்தது.

சலந்தரனை யாழியதனால் ஈரும்வகை செய்தருள் (3-327-7)

11. மாதங்காரி : யானை யுருவில் வந்த கயாசுரனைக் கொன்று அதன் தோலை உரித்துப் போர்த்தது.

"வடிவுடை வாட்டடங்கண் ணுமை யஞ்சவோர் வாரணத்தைப்
பொடியணி மேனிமூடவுரி கொண்டவன்" (3-320-5)

12. வீரபத்திரர் : தக்கனின் யாகத்தை அழித்தவர்

"தக்கன் தலையைச் செற்ற தலைவன் காண்" (6-299-6)

13. அரியாத்தர் : சிவனின் இடப்பாகம் விஷ்ணுவாகவும், வலப் பாகம் சிவனாகவும் கொண்டவர். இடப்பாகம் பச்சை நிறமாகவும் வலப்பாகம் செந்நிறமாகவும் உடைய மேனியர்.

"இடமால் தழுவிய பாகம்" (4 – 2 – 4)

"மாலுமோர் பாகமாகி" (4 – 22 – 4)

"மறிகடல் வண்ணன் பாகர் (4 – 62 – 8)

"திருமாலோர் பங் கன்தன்னை" (4 – 78 – 7)

14. அர்த்தநாரீஸ்வரர் : "பெண்ணராணெனத் தெரிவரும் வண்ணத்தர்" (2-242-5)

"சடைபாக மாதர்குழல் பாகமாக வருவர்

இது விவர்வண்ண வண்ண மிவன்வண்ணவண்ண" (4-8-10)

மெழில்வண்ண வண்ண மியல்பே

"ஓர்பாகம் பெண்ணவண்ணத்தர்" (2-228-4)

15. கிராதர் : முகாசுரனைக் கொல்ல வேடுவனாகி, அருச்சுனன் தவத்திற்கு பாசுபதம் மீந்துகந்தான்.

"பார்த்தனுக்குப் பாசுபத மீந்துகந்தான்" (1-62-5)

"வேடனாய்ச் சென்றங்கமர் மலைந்து

பார்த்தற் கடுசர மருளினானை" (4-71-7)

16. கங்காளர் : "வாமன் உருவங் கொண்ட விஷ்ணுவை வைரவ முகூர்த்தமாகச் சென்று அடக்கி தோலைப் போர்த்து முதுகு எலும்பைத் தண்டாகக் கொண்டது.

"நீண்டெரிதீபந்தன்னை,

கறைநிறத் தெலிதன் மூக்குச் சுட்டிடக் கனன்று தூண்ட

நிறைகடன் மண்ணும் விண்ணும் நீண்டவானுலகுமெல்லாம்

குறைவறக் கொடுப்பார்" (4-49-8)

17. சண்டேசானுக்கிரகர் : சிவபூசைக்காக – தந்தையாம் எச்சதத்தனைக் கொன்ற விசாரதருமருக்கு, சண்டேசுர பதவி கொடுத்தவர்.

"கடி சேர்ந்தபோது மலரான கைக்கொண்டு நல்ல
படி சேர்ந்த பால் கொண்டங் காட்டிடத் தாதை பண்டு
முடி சேர்ந்த காலையற வெட்டிட, முக்கண் மூர்த்தி
அடிசேர்ந்த வண்ணம்" (3-312-7)

"தழைத்ததோர் ஆத்தியின்கீழ் தாபரமணலாற் கூப்பி
அழைத்தங்கே ஆவின்பாலைக் கறந்துகொண்டாட்டக்கண்டு
பிழைத்ததன் தாதைதாளைப் பெருங்கொடு மழுவால்வீசக்
குழைத்ததோர் அமுதமீந்தார்" (4-49-3)

18. நீல்கண்டர் : பாற்கடலில் எழுந்த நஞ்சையுண்டு உலகைக் காத்தவர்.

"அரவத்தால் வரையைச் சுற்றி அமரரோடசுரர் கூடி
அரவித்துக் கடையத்தோன்றும் ஆலநஞ்சமுதாகவுண்டார்"
(4-70-7)

19. சதாசிவமூர்த்தி : 5 முகங்களையுடையவர். "ஐவகைகளால் - நினைவார்பால்" (6-232-3)

"சதாசிவனே நின்பாதம் போற்றிபோற்றி" (6-247-6)

20. சக்கரதாளர் : விஷ்ணுவுக்காக சுதரிசனம் சக்கரம் கொடுத்தது.
"மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்" (திருப்பல்லாண்டு)

21. விக்கினேசவரானுக்கிரகர் : "ஓம்" என்ற பிரணவ மந்திரத்தை தோற்றுவித்து விநாயகரைத் தந்தருளியது.
"மெல்லியலும் விநாயகரும் தோன்றக் கண்டேன்" (6-291-8)

22. சோமாஸ்கந்தர் : சிவம் - கந்தன் - சக்தி ஒருங்கமைந்தமை.
"செல்வியைப் பாகங்கொண்டார் சேந்தனை மகனாக் கொண்டார்" (4-43-8)

23. ஏகபாதர் : சத்தியும் சிவமும் ஒன்றிலொன்று ஒடுங்கி ஒருவராய் நின்றது. "உருவினாருமையொடு மொன்றி நின்றதோர் திருவினான்" (3-281-1)
"ஏழுலாகாய் நின்ற ஏகபாதர்" (6-249-2)

24. சுகாசனர் : சிவாகமங்களை சுகாசனமாக இருந்து சிவபெருமான் உமாதேவியாருக்கும் உபதேசித்தமை.
"தொகுத்த வனருமறையங்கமாகமம் வகுத்தவன்" (3-281-6)
"சாமுண்டி சாமவேதம் கூத்தொடும் பாடவைத்தவர்" (4-32-4)

25. தட்சாயணமூர்த்தி : சனகர் முதலிய நால்வருக்கு ஞான குருவாய் உபதேசித்தவர்.
"பண்டுநால்வருக் கறமுரைத் தருளி" (2-243-7)
"அருந்தருக் காலன் கீழ றமுதலா நான்கினையும்"
(திருவாசகம்)
"தக்கணாபோற்றி தருமா போற்றி" (6-219-10)

26. இலிங்கோற்பவர் : பிரம்மா – விஷ்ணுவின் கர்வமடக்க சோதிலிங்கமானவர்.
"அண்டமூர்த்தி யழனிற வண்ணனைக்
கெண்டிக் காணலுற்றரங் இருவரே" (5-219-10)

"செங்கணானும் பிரமனுந் தம்முறே
எங்குந்தேடித் திரிந்தவர் காண்கிலர்
இங்குற்றே னென்றிலிங்கத்தே தோன்றினான்" (5-219-11)

# 7. ஆலய வழிபாடும் திருமுறைகளும்

இறைவனை சரியை – கிரியை – யோகம்- ஞானம் ஆகிய நான்கு பாதங்கள் மூலம் நாம் வழிபடுகின்றோம். மனத் தூய்மையுடன் ஐம்புலன்களையும் அடக்கி, இறை திருநாமங் களையோ, திருமுறைகளையோ ஓதுவோம். திருக்கோயில்களில் நமஸ்காரம் செய்து, திருத்தொண்டுகள் செய்வோம். இறை தானஞ் செய்து திருநீறு – தீர்த்தம் - சந்தனம் - பூக்கள் முதலிய பிரசாதம் பெற்று விரதம் இருப்போம். நமது வாழ்க் கையை நல்ல முறையில் இறை தியானத்துடன் சிந்தித்திருப் பதே நாம் பெறும் பெருஞ்செல்வமாகும்.

“ஆலயந்தானும் அரனெனத் தொழுமே” என்பது சிவ ஞானபேதம் சொல்லும் உண்மையாகும். ஆம் “செல்வன் கழலேத்துஞ் செல்வம் செல்வமே” யாகும்.

இந்த மானிட வடிவத்தைத் தந்த, இறைவனின் அற்புத தரிசனத்தைக்காண்பதே பெரும்பேறாகும்.

“குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போன் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய வெடுத்த பொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே” (4-81-4)
என்றார் நாவுக்கரசர்

“நிலைபெறு மாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும்எம் பிரானுடைய கோயில் புக்கு
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டு
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்துபாடி
தலையாரக்கும் பிட்டுக் கூத்துமாடி
சங்கரா சயபோற்றி போற்றி என்றும்
அலைபுனல் சேர் செஞ்சடையெம் ஆதீ என்றும்
ஆரூரா என்றென்றே அலறாநில்லே” (6-245-3)

அன்றாட வாழ்க்கையில் நாம் உள – உடற்சுத்தியுடன் இறைவனை வழிபட ஏற்ற இடம் கோயில்தான் என்பதை நாவுக்கரசரின் மேற்படி பாடல் உணர்த்துகின்றது.

"எமது உள்ளமும் - உடலும் இறைவனை வணங்கி ஈடேறும் பொருட்டே" என்பதை மற்றொரு பாடலில் காண்போம்.

"வைத்தனன் தனக்கே தலையுமென் நாவும் நெஞ்சமும்" (7-14-1)

"தலையே நீவணங்காய் தலைமாலைதலைக் கணிந்து" (4-9-1)

திருநாவுக்கரசரின் திருவங்கமாலையில் எமது உடம்பும், உள்ளமும், தலை, கண், செவி, மூக்கு, வாய், கை, கால் முதலிய அவயவங்களும் இறைவனை வணங்கவே தரப்பட்டவை என்ற உண்மையை நாம் காண்கின்றோம்.

இறைவனது பெருமைகளைக் குறிப்பிடும் திருநாமங்களை எமது நாவாரச் சொல்லி அவன் புகழைப் பாடுவோம், ஆடுவோம். அந்த இறைவனுக்கு ஆயிரமாயிரம் திருநாமங்கள் உண்டு. அந்த நாமத்தைச் சொல்லிப் பழகாத நாவானது நாவாகாது என்பதை திருஞானசம்பந்தர் குறிப்பிடுகின்றார்.

"நம்பனாம நவிலாதன நாவெனலாகுமே" (2-141-3)

இறைவனின் ஆயிரம் திருநாமங்கள் பற்றி பல நூறு பாடல்களில் சிறப்பாகக் குறிப்பிடுவர்.

"நூற்றுப் பத்தாய பேருடையார் பெருமானார் (2-203-9)

"பேராயிரம் பிதற்றத் தீரும் பிணிதானே" (2-195-2)

"ஞானப்பேராயிரம் பேரினான்" (3-284-5)

"ஆயிரம் பேருகந்தானும் ஆரூரமர்ந்தவம்மானே" (4–5-8)

"எண்ணுவ நீரவ னாயிர நாமமே" (5-189-3)

"பேராயிரம் பரவி வானோரேத்தும் பெம்மானே" (6-268-8)

"பேராயிரம் பேருடையார்" (7-18-3)

"பேரோராயிரமும் உடையானை" (7-56-11)

"பேராயிரமுடைப் பெம்மான் போற்றி" (போற்றித்திருவகவல் 200)

"ஆயிரம் திருநாமம்பாடி தெள்ளோணங்கொட்டாமோ"

(திருத்தெள்ளோணம்)

"பேர்கள் ஆயிரம் நூறாயிரம் பிதற்றும்" (திருவிசைப்பா – "ஏர்கொள்"

எனவே திருக்கோயில் சென்று வெண்ணீறணிந்து, பண்ணொன்றிய பாட்டிசைத்து, மலர்கள் கொண்டு சேவித்து, வெண் சங்கம் ஊதி சிவதரிசனம் கண்டு பேரின்பம் காண்போம்.

**"திருக்கோவிலில்லாத திருவிலூரும்**
**திருவெண்ணீறணியாத திருவிலூரும்**
**பருக்கோடிப் பத்திமையாற் பாடாவூரும்**
**பாங்கினொடு பலதளிகள் இல்லாவூரும்**
**விருப்போடு வெண்சங்கம் ஊதாவூரும்**
**விதானமும் வெண்கொடியும் இல்லாவூரும்**
**அருப்போடு மலர் பறித்திட்டுண்ணாவூரும்**
**அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே"** (6-303-5)

தவறாமல் நீர்மூழ்கி, பூப்பறித்து மூன்று வேளையும் பூமாலைகளால் இறைவனை வணங்கவேண்டும்.

**"முட்டாமே நாடோறும் நீர்மூழ்கிப் பூப்பறித்து மூன்றுபோதும்**
**கட்டார்ந்த இண்டைகொண்டடிசேர்த்தும்"** (7–30-3)

இறைவனை ஐம்புலன்கள் ஒன்றிட, அட்டாங்க பஞ்சாங்க முறைப்படி வணங்கி, உள்ளம் உருகி அன்பினால் வண்தமிழ் மாலைகள் இன்னிசையாற் பாடிய சுந்தரமூர்த்திநாயனார், நம் வழிமுறைகளை உணர்த்தியிருக்கின்றார்.

**"அன்பு பெருக உருகி உள்ளம் அலைய**
**அட்டாங்க பஞ்சாங்கமாக**
**முன்பு முறைமையினால் வணங்கி**
**முடிவிலாக் காதல் முதிர ஓங்கி**
**நன்புலன்களாகிய ஐந்தும் ஒன்றி**
**நாயகன் சேவடி எய்தப்பெற்ற**
**இன்ப வெள்ளத்திடை மூழ்கி நின்றே**
**இன்னிசை வண்தமிழ் மாலைபாட"**

(சேக்கிழார் பெ.புராண. தம். 126)

**"தெண்ணிலா....... கைமலர் உச்சிமேற்குவித்து**
**பண்ணினால் நீடி அறிவரும்பதிகம் பாடினார் பரவினார் பணிந்தார்"**

(சேக்கிழார் பெரிய புராணம்)

எமது வாழ்க்கை முழுவதும் தொண்டனாக இருந்து இறைவனுக்கு இருக்கு மந்திரங்கள் ஓதி நன்னீராட்டி, குங்குமக் குழம்பு அங்கமெலாஞ் சாத்தி, பூமாலை கொண்டு சாத்தி வணங்க வேண்டும்.

**"தூயகாவிரியின் நன்னீர் கொண்டு இருக்கு ஓதி**
**ஆட்டிக் குங்குமஞ் சாத்தி இண்டைகொண்டு**
**ஏறநோக்கி ஈசனை, எம்பிரானைக் கண்டனை கண்டிராதே"**

(4-75-1)

பின்னர் இறைவனைத் தியானிக்க வேண்டும்.

உள்ளமாகிய வீட்டினில், உள்ளம் என்கின்ற விளக்கில், அதில் உணர்வு என்னும் நெய்யிட்டு, உயிரென்னும் திரியிட்டு அதை ஞானத்தால் எரியூட்டி இருந்து வணங்கும்போது இறைவனின் திருவடியைக் காணலாம்.

**உடம்பெனும் மனையகத்துள் உள்ளமேத களியாக**
**மடம்படும் உணர்நெய்யட்டி உயிரெனுந் திரிமயக்கி**
**இடம்படு ஞானத்தீயால் எரிகொள இருந்து நோக்கில்**
**கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே.** (4-75-3)

மேற்படி இருபாடல் உண்மைகளையும் விருப்புடன் பொறுமையாக ஆசாரமாகச் செய்துவர சிவகதியே விளையும் என்பதை திருநாவுக்கரசரின் "மெய்மையாம் உழவைச்செய்து" பாடல் (4-76-2) கூறும்.

"***சிவசிவ என்னச் சிவகதிதானே***" என்பது திருமந்திரம்

பொதுவாக திருக்கோவில்களில் இடம்பெறும் பூசைகளில் பஞ்சபுராணம் ஓதப்படுவதும், உற்சவ காலங்களில் நவசந்திக் குரிய தேவாரங்கள் பண்ணுடன் இசைக்கப்படும். தீர்த்தோற் சவத்தில் மாணிக்கவாசகரின் திருச்சுண்ணப்பாடல்கள் பாடப்படு கின்றது. மார்கழி மாதத்தில் சிறப்பாக திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை விடிகாலையில் திருக்கோவில்களில் பாடி இன்புறுவதும் நாம் காணக்கூடியதாகவுள்ளது.

# 8. திருமுறைகளில் சைவசித்தாந்த உண்மைகள்

அநாதியாகவுள்ள முப்பொருள்களாம் பதி – பசு – பாசம் ஆகிய உண்மைகளையும், இறைவனது அருவம் - உருவம் - அருவுருவம் ஆகிய மூன்று உருவ இயல்புகளையும், உயிர்கள் முத்தியின்பம் பெறும் பொருட்டு இறைவன் செய்யும் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் தொழில்களையும், அதற்கான சாதனங்களாக குரு – லிங்க – சங்கம வழிபாட்டு நெறிகளையும் திருமுறைப்பாடல்களில் அருளாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். ஆன்ம ஈடேற்றத்துக்கான சரியை – கிரியை – யோகம் – ஞானம் – ஆகிய நான்கு பாதங்களையும், சிவாலய வழிபாட்டின் அவசியத்தையும், நமஸ்காரம் - விரதம் - தொண்டுகள் செய்து, இறைவனை அகத்திலும் - புறத்தில் திருநீறும் - ஐந்தெழுத்தும் கொண்டும் பூசிக்கின்ற செயல்முறைகளைக்கூட நாம் திருமுறைப் பாடல்களில் காணலாம்.

1) இறைவனது ஒப்பற்ற பெருமைகளைக் குறிப்பிடுகின்றபோது அட்டமூர்த்தங்களையுடையவன் எனச் சுருக்கமாகக் கூறுவர். அட்டமூர்த்தங்களாவன : நிலம், நீர், தீ, காற்று, ஆகாசம், உயிர், ஞாயிறு, திங்கள்.

"பாரானை, மதியானை, பகலானை, பல்லுயிராய், பரவெளியாய், நீரானை, காற்றானை, தீயானை" (6-264-1)

"இரவியும் மதியும் விண்ணும் இருநிலமும்புனலும் காற்றும்
உரகமார் பவனம் எட்டுத்திசை ஒளி உருவமானாய்"
(4-63-7)

'குணங்கொள் கோளெட்டு மூர்த்தி யிணையடி' (5-140-7)
'எண்டிசைக்கு மூர்த்தியாய் நின்றான்றன்னை' (6 –217 -7)
எட்டினாற் றிகழும் திருமூர்த்தி (7 – 54 -2)

2) இறைவன் அத்துவிதமாய் நிற்பான்
"விறகிடைத்தீயர்" (4- 64 - 5)
"விறகில் தீயினன்" 4-204-10)
'பண்ணில் ஓசை பழத்தினின்சுவை' (5 – 161 -8 )

**இறைவன் ஒன்றாய், இரண்டாய், மூன்றாய் பலவாய் நிற்பான்**

"மூவரென இருவரென முக்கணுடை மூர்த்தி"
(சுந்தரர் - மூவரென)

"மேவி லொன்றர் விரிவுற்றவிரண்டினர் மூன்றுமாய்
நாவில் நாவர் உடல் அஞ்சினர் ஆறர் ஏழோசையர்
தேவில் எட்டர் திருவாஞ்சிய மேவிய செல்வனார்" (2-143-3)

(ஒன்றர் - சிவன்; இரண்டர் - சிவம், சக்தி; மூன்று – பதி, பசு, ஞானம்; நாலர் - நான்மறையினர்; அஞ்சினர், பரை, ஆதி, இச்சை, ஞானம், கிரியை ஆகிய ஐந்து – சக்தி திருமேனிகள்; ஆறர் - அறுகுணத்தார்; கங்கையார்; ஏழோசையர் - ஏழிசையோசைகள்; எட்டர் - அட்டமூர்த்தி)

**ஐம்பொருள் பூதங்களாய் நின்றவன் இறைவன்**

'நீல நீரொடாகாசமனல் காலாகி நின்றைந்து
புலநீர்மைபுறற்கண்டார் (2-191-6)

எங்கும் நிறைந்து சிவபெருமான் இருப்பினும்

1. திருக்கோவிலில் உள்ள உருவத்திருமேனிகளிலும்
2. மெய்யடியார்களின் சிவவேடத்திருப்பொலிவை இடமாகக் கொண்டும்
3. அகத்தே உயிர்களை இடமாகக் கொண்டும் அருள் புரிவான்.

3) அருவமாய் உருமாயும் உருவ மற்றும் இறைவன் நிற்பான்
"நிரூபியாய் ரூபியுமாய் நின்றான் கண்டாய்" (6-237-3)
அருவமு முருவமு மானாய் போற்றி
(8 - போற்றித்திருவகவல் 193)

4) இறைவன் ஆதியும் அந்தமும் இல்லாதவன்
'அந்தமு மாதியுமாகிய வண்ணல்' (1-39-1)
'ஆதியும் அந்தமும் இல்லாதவேதியை' (2-150-2)
ஆதியும் அந்தமுமான ஐயாறன் அடித்தலமே (4-93-7)
அந்தமும் ஆதியுமாகி நின்றீர்' (4-96-2)
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே (சிவபுராணம்74)

5) இறைவனுக்கு எட்டுவகையான குணங்கள் உண்டு
'எட்டுவான் குணத்தீசன்' (5-203-8)
"இறையவனை மறையவனை எண்குணத்தினனை" (7-40-3)

6) பிறப்பிறப்பில்லாதவன் இறைவன்
"தோன்றிய பிறப்பும் இறப்பறியாதவர்" (3-381-8)
'பிறப்பிலியை இறப்பிலியை" (6-274-6)
"சாதல் பிறத்தலின்றி" (7-17-7)

7) இறைவன் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு ஐந்தொழில்கள் செய்வான்
"ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்"
(மாணிக்கவாசகர் சிவபுராணம் 42)

8) இறைவன் உயிர்களிடத்துள்ள மலத்தை (ஆணவம்) நீக்குவான்
"திரிதரு புரமெரிசெய்த சேவகன்" (3-281-9)
"தீராத வல்வினை நோய் தீர்ப்பார்தாமே" (6-292-9)
"தொடர்ந்த வல்வினை போக்கிடுஞ் சோதியார்" (5-139-2)

"பாசமாம் பற்றறுத்து பாரிக்கும் ஆரியனே" (சிவபுராணம் 64)

9) முப்புரங்களை எரித்தவர்
வாசுகி என்னும் பாம்பை நாணாகவும், மேருமலையை வில்லாகவும் வளைத்து முப்புரங்களை எரித்தவர்.
"விழித்தழல் நாகந் தாங்கிய, மேருவெஞ்சிலையாக்
குனித்ததோர் வில்லார்" (3-381-3)

10) இறைவன் உணர்தற்கரிய நூற்பொருளாய் உள்ளான்
"நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் உணர்வே"
(சிவபுராணம் - 76)

11) வணங்காதவர்கட்கு காண்பதற்கரியவன்
"ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே" (சிவபுராணம் 68)
"ஓராதார் உள்ளத்து இல்லார்தாமே" (6-250-8)

12) அடியவர்களின் பிறவி எடுக்கும் துன்பத்தை நீக்குவான்.
'சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான் (சிவபுராணம்-47-48)
"அல்லற் பிறவி அறுப்பானே" (சிவபுராணம் 91)

13) வேதத்தின் பொருளாய் இறைவன் உள்ளான்.
''வேதத்தின் பொருளான் காண்" (6-278-10)
'ஆறுகந்தார் அங்க நான்மறையாளர் (7-19-4)

14) தாயாகி தந்தையான தயாளன் இறைவனே
"தாயு நீயே தந்தை நீயே சங்கரனே அடியேன்" (1-50 -7)
'எந்தையுமெந்தை தந்தை தந்தையுமாயவீசா' (4-64-7)

''தாயவளாய்த் தந்தையாகி சாதல் பிறத்தல் இன்றி' (7-17-7)
'தாயுமிலி தந்தையிலி தான்றனியன் காணேடி (திருச்சாழல்-3)

15) இறைவன் தனது அடியவர்க்கருள் புரிவதற்காக வடிவங் கொள்வான்.

**i. வேடனாக வடிவங்கொண்டு அருச்சுனனுக்கருள் செய்தார்.**

"விசயனுக்கு வேடனாய் நின்றான் தன்னை" (6-24-8-2)

"வேடனாய் விசயற்கருள்புரிந்த இந்து சேகரனே" (7-70-5)

**ii.** சுந்தரமூர்த்தி நாயனாருக்கு அந்தணர் வடிவில் ஆவணங் காட்டி ஆட்கொண்டான்.

**வெண்ணெய் நல்லூரில் அற்புதப் பழ ஆவணங்காட்டி**
**அடியவனாயென்னை ஆளதுகொண்ட"** **(7-68-6)**

சுந்தரமூர்த்தி நாயனாருக்கு தூதனாக, தோழனாக இருந்தவன்

**"அடியேற்கு எளிவந்த தூதனை, தன்னைத் தோழமையருளி"** **(7-68-8)**

**"தூதனை என்றனை ஆள் தோழனை"** **(7-84-9)**

**"என்னுடைய தோழனுமாய்"** **(7-51-10)**

சுந்தரமூர்த்தி நாயனாருக்கு அந்தணர் வடிவில் பிச்சை எடுத்து சோறு அளித்தான்.

**"கதுவாய் தலையில் பலி நீகொள்ள"** **(7-41-1)**

**"ஒறுவாய் தலையில் பலி நீ கொள்ள"** **(7-41-6)**

**iii.** தமிழ்ச் சங்கப் புலவனாக தருமிக்காக தமிழ்ச்சங்கம் ஏறியவன்

**"நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி**
**நற்கனகக் கிழிதருமிக் கருளினோன்காண்"** (6-290-3)

**iv. பாணபத்திரனுக்காக யாழ்ப்பாணர் வடிவங் கொண்டவன்**

**"பண்பால் யாழ்பயில் பாணபத்திரன் தன்பால்**
**என்பால் அன்பின் தன்பால்**
**காண்பது கருதிப் போந்தனன்"**

(11ம் திருமுறை – திருவாலவாயுடையார் திருமுகப் பாசுரம்)

**"பண்சுமந்த பாடற்பரிசு"** (திருவெம்மானை - 8)

**v.** செம்மனச்செல்விக்காக கூலியாளாய் மண்சுமந்தவன்.

**"மணியார் வைகைத் திருக்கோட்டில் நின்றதோர்**
**திறமும்"** (நாவுக்கரசர் - அருப்போட்டு)

**"அடியவட்காக பாங்காய் மண் சுமந்தருளிய பரிசும்"**

(கீர்த்தித்திருவகவல் 58 – 59)

**"கலிமதுரை மண்சுமந்து கூலி கொண்டு"**

("பண்சுமந்த பாடல்" - திருவம்மானை 8)

vi. மாணிக்க வாசகருக்காக குருவாக எழுந்தருளினான்.

**"அருபரத்தொருவன் அவனியில வந்து**

**குருபரனாகி யருளிய பெருமை"** (போற்றித் திருவகவல் 75 - 76)

**"அறைகூவி ஆட்கொண்டருளி**

**மறையோர் கோலம் காட்டி"** (திருவண்டப்பகுதி 148 – 149)

**"சுந்தரவேடத்து முதலுருவு கொண்டு**

**இந்திரஞாலம் போல வந்தருளி"** (கீர்த்தித்திருவகவல் 93-94)

vii. இரசவாதஞ் செய்ய தோன்றியவன்

**"பொன்னனையை மேனி பொலிந்து தோன்றும்"** (6-232-7)

viii. விருத்தராகும் பாலனாக தோன்றியவன்

**"விருத்தராகும் பாலனார்"** (4-43-2)

16) இறைவனை குரு – லிங்கம் - சங்கம வழிபாட்டின் மூலம் காணலாம்.

## (அ) குருவடிவம்

குருவடிவாக வந்து ஆட்கொள்ளுதல்.

அப்பூதியடிகள், மாணிக்கவாசகர், கணநாதர் என பல அடியார்கள் குருவடிவாக இறைவனை வணங்கி முத்தியின்பம் பெற்றனர்.

**"திருப்பெருந்துறையில் கண்ணார் கழல்காட்டி**

**நாயேனை ஆட்கொண்ட அண்ணாமலையானை"** (திருவம்மானை 10)

**"அந்தணன் ஆகி ஆண்டுகொண்டு அருளி"** (கீர்த்தித்திருவகவல் 42)

**"பால் தெளித்து தன் பாதங்காட்டி"** (4-5-4)

## (ஆ) லிங்க வழிபாடு

மார்க்கண்டேயர் சிவலிங்க வழிபாடு செய்து முத்தியின்பம் பெற்றவர்.

"தொழுதெழு மார்க்கண்டேயன் வீடுநாளனுகிற்றென்று
மெய்கொள்வான் வந்தகாலன் பாடுதான் செல்லு மஞ்சிப்
பாதமே சரணமென்னச் சாடினார் காலன் மாள" (4 – 65 - 1)

சண்டேசுரநாயனார் மணலால் லிங்கமமைத்து வழிபட்டு ஈடேறினார்.

"பால் கறந்தாட்டக் கோலவெண்மணற்சிவன் தன் மேற்சென்ற
தாதை தாளற எறிந்த சண்டிக்கு, உன் சடைமிசைமலர் அருள்செய"
(7-55-3)

## (இ) சங்கம வழிபாடு

திருநீலகண்டர், சிறுத்தொண்டர், இளையான் குடிமாறர், மெய்ப்பொருள்நாயனார் முதலியவர்கள் அடியார்க்களுக்குத் திருத்தொண்டு செய்து முத்தியின்பம் பெற்றனர்.

"திருநீறும் சாதனமுங் கண்டால்" (6-275-3)

"தில்லைவாழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்"
(சுந்தரர் - திருத்தொண்டத்தொகை)

# 9. இறைவன் உறையுங் கோயில்கள்

i. இறைவன் பல்வகைக் கோயில்களிலும் உள்ளான்.

(அ) "நெடுமா பெருங்கோயிலாயவனை" (2-158-11)

(ஆ) "செல்லோ கொடியன் சிவன் பெருங்கோயில் சிவபுரம்" (4-98-9)

(இ) "பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயில் எழுபதினோ டெட்டும் மற்றுங்
கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற் கோயில்
கருப்பறியற் பொருப்பனைய கொகுடிக்கோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிபட்டேத்தும்
இளங்கோயில் மணிக்கோயில் ஆலக்கோயில்
திருக்கோயில் சிவனுறையுங் கோயில் சூழ்ந்து
தாழ்த்திறைஞ்சத் தீவினைகள் தீரும் அன்றே" (6-285-5)

(ஈ) "தோற்றுக்கோயிலும் தோன்றியகோயிலும்
வேற்றுக்கோயில் பலவுள" (நாவுக் - தோற்றுக்)

ii. இவ்வாறு பலகோயில்களிலும் காட்சி தரும் இறைவன் திருக் கைலாய மலையில் அமர்ந்துள்ளான்.

**"கலைமலி செம்பொற் கயிலைமலையானே" (2-151-15)**

**திருக்கயிலாய பதிகம் - திருநேரிசை 47 — நாவுக்கரசரின் பாடல்கள் யாவும்**

**"வடகயிலை மலையதுதான் இருக்கைபோலும்" (6-296-3)**

iii. இறைவன் திருநடமிடும் கோலத்தில் தில்லை யம்பலத்தினில் காட்சிதருகின்றான்.

**"தில்லை நடம்பயிலுந் தலைவன்றன்னை" (6-248-6)**

**தில்லையம்பலத்துள் நிறைந்தாடுங்கூத்தனை" (7-62-4)**

iv. இறைவன் உள்ளக்கோயிலில் எழுந்தருள்வான்.

இறைவனைக் கணநேரமும் மறவாமல் தியானிப்பவர்கள், தமது ஐம்புலனையும் அடக்கி வழிபடுவார்கள். இத்தவசீலர் களுக்கு இறைவன் அவர்களின் உள்ளத்தில் கோயில் கொண்டு எழுந்தருள்வான்.

**"நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்**
**நினையாதொரு போதும் இருந்தறியேன்" (நாவுக்கரசர்)**

**"இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான்" (மாணிக்கவாசகர்)**

இறைசிந்தையுடன் கணமும் மறவாத ஆசாரசீலர்களின் உள்ளத்தில் இறைவன் உறைவதால் "உள்ளக்கோயில்" என அழைக்கின்றோம்.

**"இறைஞ்சுவார் சிந்தையுள்ளே கோயிலாகத் திகழ்வானை" (2-200-2)**
**"தேடுமடியார் சிந்தையுள்ளே கோயிலாகத் திகழ்வான்"** (2-200-3)

**"சேவடி காலையு மாலையுங் கைதொழுவார் மனம் ஆலயம்"**
(4-17-8)
**"நினைப்பவர் மனங் கோயிலாக் கொண்டவன்"** (5-117-1)
**"என்னுள்ளம் கோயிலாக்கி" (4-5-2)**
**"காலையும் மாலையும் கைதொழுவார் மனம் ஆலயம் -**
**ஆரூரர் அறநெறிக்கே" (4-17-8)**
**"அறவையேன் மனமே கோயிலாகக் கொண்டவன்"**
**(திருவாசகம் - பிடித்தபத்து 6)**
**"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்" (திருமந்திரம்)**
**"மறவாமை யானமைத்த மனக்கோயில் உள்ளிருத்தி"**
**(12 – வாயி – 8)**

அன்பர்களது மனம் - வாக்கு - காயம் மூன்றிலும் இறைவனைக் காண்கின்ற உண்மையை சம்பந்தப் பெருமான் பின்வருமாறு கூறுகின்றார்.

**"வாயினும் மனத்தும் மருவிநின்றகலா மாண்பினர்"** **(3-381-5)**

**"சிந்தையிடையார் தலையின்மிசையார் செஞ்சொல்லார்**
**வந்துமாலை வைகும்போது என் மனத்துள்ளார்"** **(2-196-1)**

நாம் சிவத்திருத்தலங்களைத் தேடித் தேடி வழிபட்டு அவன் கழல் - நாமம் பாடி உருக, இறைவன் நம் உள்ளக்கோயிலில் உறைவான்.

**"நாடும்நகரமும் நல்திருக் கோயிலும்**
**தேடித் திரிந்து சிவபெருமான் என்று**
**பாடுமின்பாடிப் பணிமின் பணிந்தபின்**
**கூடிய நெஞ்சகத்தை கோயிலாக் கொள்வனே"** **(திருமந்திரம்)**

# 10. இறைவனை தேவரும் முனிவரும் கந்தருவரும் பணிந்தேத்துவர்

1. அசுவதரன் - கம்பளன் கந்தர்வர்கள் இருவம் இறைவன் செவிகளிலே இருந்து மலர்தூவி, கைகூப்பி வழிபடுவர்.

**"கந்தருவஞ் செய்திருவர் கழல் கைகூப்பிக்**
**கடிமலர்கள் பல தூவி காலைமாலை**
**இந்திரனும் வானவரும் தொழச் செல்வானை"** **(6-217-4)**

**"வானவர்கள் தாம் வணங்கி வாழ்த்தும் அடி"** **(6-220-7)**

**"கோவாய இந்திர னுள்ளிட்டராக, குமரனும் விக்கின**
**விநாயகன்னும், பூவாய பீடத்துமேலயன்னும்**
**பூமியளந்தானும் போற்றிசைப்ப"** **(6-227-10)**

**"மங்கலக்குடி ஈசனை மாகாளி**
**வெங்கதிர்ச்செல்வன் விண்ணொடு மண்ணும் நேர்**
**சங்கு சக்கரதாரி சதுர்முகன்**
**அங்ககத்தியனும் அர்ச்சித்தாரன்றே"** **(5 -187-3)**

சூரியனின் பிள்ளைகள் சம்பாதி – சடாயு இருவரும் பறவை வடிவெடுத்து வணங்கினர்.

**ஆதித்தன் மகனென்ன வகன் ஞாலத்தவரோடும்**
**போதித்த சடாயென்பான் புள்ளிருக்கு வேளூரே.** **(2-179-9)**

**தள்ளாய சம்பாதி சடா யென்பார் தாமிருவர்**
**புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே.** **(2-179-1)**

பிரமாவின் வழிபாட்டை முன் ஒரு காலத்தில் இறைவன் ஏற்றவன்.

**"ஏடுடைய மலரான் முனைநாள் பணிந்தேத்த அருள்செய்த"**
(1-1-1)

# 11. இறைவன் ஆடிய திருக்கூத்துகளும் திருமுறைகளும்

சிவதாண்டவங்கள், 108 என்பார் அகத்தியர். 12 தாண்டவங்களுக்கு சாரங்கதேவர் i) ஆனந்த தாண்டவம் ii) சந்தியா தாண்டவம் iii) சிருங்கார தாண்டவம் iv) திரிபுர தாண்டவம் v)ஊர்த்த தாண்டவம் vi) முனி தாண்டவம் vii) சம்ஹார தாண்டவம் viii) உக்கிர தாண்டவம் ix) பூதத்தாண்டவம் x) பிரளய தாண்டவம் xi) புஜங்க தாண்டவம் xii) சுத்த தாண்டவம் எனப் பெயர் குறிப்பிடுகின்றார்.

| | |
|---|---|
| "படியாகிய பண்டங்களின்றெரியாடி" | (2-171-9) |
| "பலியேற்றுழல் பாண்டரங்கன்" | (3-259-5,6) |
| "பண்டரங்கவேடத்தான்" | (4-12-2) |
| "குழையாடக் கொடுகொட்டி கொட்டா வந்து" | (6-223-6) |
| "கொடுகொட்டி தாளமுடையார்போலும்" | (6-223-10) |
| "கொடுகொட்டி கொண்டதோர் கையான்தன்னை" | (6-243-6) |
| "கொடுகொட்டியோர் வீணையுடையவனே" | (7-42-9) |
| "அம்பலத்தே மன்னிக் கூத்தை ஆடுவான்" | (6-247-3) |
| "ஆடினார் பெருங்கூத்து காளிகாண" | (4-297-5) |
| "பண்டரங்க வேடனை" | (4-297-8) |
| "வீரன்காண் வீரட்ட மேவினான்காண்" | (6-263-9) |

# 12. இறைவனது அட்டவீரங்களும் திருமுறைகளும்

1. பிரமனது சிரங்கொய்தமை (தலம் - திருக்கண்டியூர்)
   "தக்கனையு மெச்சனையுந் தலையறுத்து" (8- திருச்சாழல்-5)

2. அந்தகா சுரனைக்கொன்றது (தலம் - திருக்கோவலூர்)

3. திரிபுரத்தை எரித்தது (தலம் - திருவதிகை)
   "கோத்தன்று முப்புரந் தீவளைத்தான்" (4-81-5)
   "பொலிசேர் புரமூன்று எரியச் செற்ற புரிபுன் சடையானே"
   (7-47-8)

4. தக்கன் சிரசைத்தடிந்தமை (தலம் - திருப்பறியலூர்)
   "தக்கனார் தலையரிந்தசங்கரன்" (2-233 – 11)

5. சலந்தரனின் தலையரிந்தமை (தலம் - திருவிற்குடி)
   "சலந்தரனைக் கொல்வதற்கு முன்னோ பின்னோ" (6-247-7)
   "சமரம்மிகு சலந்தரன் போர்வேண்டினானை சக்கரத்தாற்
   பிளப்பித்தசதுரர் போலும்" (6-267-2)

6. கஜன் என்னும் யானையையுரித்தமை (தலம் திருவழுவூர்)
   "கடிதெனவந்தகரிதனை யுரித்தே அவ்வுரி மேனி
   மேற்போர்ப்பர்" (7-381-2)

7. மன்மதனை எரித்தமை (தலம் - திருக்குறுக்கை)
   "மன்மதன்றன் தென்னீருருவமழியத்
   திருக்கண் சிவந்து நுதலினார் (1-68–4)

8. இயமனை உதைத்தமை (தலம் - திருக்கடவூர்)
   "கன்றிய காலனைக் காலாற் கடிந்தானடியவற்காய் (4-81-2)

# 13. இறைவனை நீரும் - பூவும் கொண்டு வணங்குதல்

இறைவன் "மந்திரங்களுட் சிறந்த பிரணவ மந்திரத்திற் குரிய தெய்வம் தாமே" என்பதை உணர்த்த உருவிலும், வடிவிலும் பிரணவ வடிவான கொன்றை மலரை விரும்பி அணிகின்றான். பிரணவ புட்பம் என கொன்றை மலர் அழைக்கப்படும். இறைவன் கொன்றை மாலையை அணிந்தவன். "நறுங்கொன்றை நயந்தவனே" (3-259-1) என்கின்றார். திருஞானசம்பந்தர்.

இறைவனுக்கு நன்மலர்கள் தூவ, இன்பமடைவான். வாசமலர்கள் தூவ எமக்கு இறை அன்பு வளரும். பத்திமலர்கள் தூவ எமக்கு முத்தி கிட்டும். மானதமாகச் சாத்தும் அட்டமலர்களாவன கொல்லாமை, ஐம்புலனடக்கம், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்புடைமை.

இறைவனுக்கு நீரும் பூவுங்கொண்டு, அவன் திருநாமம் ஓதி, தினமும் தொழுபவர்கள் அடியார்கள். அட்டபுட்பங்கள் கொண்டு அடியார்கள் வணங்குதல் சிறப்பானது ஆகும். அட்டபுட்பங்களாவன – புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியாவர்த்தம், நீலோற்பலம், பாதிரி, அலரி, தாமரை என்பனவாம்.

"நறுமலர் புனலொடு தூபஞ் சாந்தமு மேந்திய கையினராகிய
கன்னியர் நாடொறும் வேடமே பரவும்" (1-79-6)

"மலர் நீரவை தூவித் தொழுதேத்தும் ஞாலம் புகழடியார்" (1-15-9)

"கரவின்றி நன்மாமலர் கொண்டு இரவும் பகலும் தொழுவார்கள்"(1-38-1)

"கொய்து பத்தர் மலரும் புனலுங்கொடு தூவித்துதி செய்து" (1-2-10)

"நன்று தரு நாண் மலரால் நல்லிருக்கு மந்திரங்கொண்டு" (1-62-3)

"தண்ண மலர்கள் தூவித் தாள்கள் தொழுதேத்த" (1-89-6)

"பூவார் மலர்கொண் டடியார் தொழுவார்" (1-69-1)

"வாசமலர்கள் தூவப் பாசவினைகள் போமே" (1-93-4)

"நாவானாத னாமமோதி நாடொறும் பூவால் நீரால் பூசுரர் போற்றும்" (2-199-2)

"வம்பார் கொன்றை வன்னி மத்த மலர்தூவி" (2-200-6)

நித்தலுந் நியமஞ்செய்து நீர்மலர் தூவி சித்தமொன்ற வல்லவர்க்கு"
(அகப்பூசை சித்தம் ஒன்றல், புறப்பூசை நீர்மலர் தூவுதல்) (2-174-1)

"கட்டலர்ந்தமலர் தூவிக் கைதொழுமின்" (2-177-4)

"நீடுமலரும் புனலுங் கொண்டு நிரந்தரம் தேடுமடியார்" (2-200-3)

"புதியபூவொடு சாந்தமும் புகையும் கொண்டு ஏத்துதல்
புரிந்தோர்க்கே" (2-239-5)

"வண்ணமாமலர் தூவிக் கைதொழ" (2-248-4)

"நீர் தீப மாலை தூபமுஞ் செறிந்த கையராகி" (2-233-2)

"நீர் கொண்டும் பூக்கொண்டும் நீங்காத் தொண்டர் நின்றேத்த"(2-191-3)

(சிவபூசை செய்பவர்க்கு நீரும் பூவும் அவசியம்)

"பத்தரொடு பலரும் பொலியம்மலர ங்கைப்புனல் தூவி
"ஒத்தசொல்லி யுலகத்தவர் தாந்தொழுதேத்த" (1-3-1)

அடியார்கள் நீர், தீபம், மாலை, தூபம் என்பவை கொண்டு சிவபூசை செய்ய வேண்டும் என்பதைக் கூறும் திருஞானசம்பந்தரின் பாடல் வரிகள்.

**"சாவதன்முனம் - இசைந்துநீர் தீப மாலை தூபமுஞ்**

**செறிந்த கையராகி நந்தேவ தேவன் மன்னுமூர்"** (2-233-2)

**"போதினாலும் புகையாலு முய்த்தே யடியார் கடாம்**

**போதினாலே வழிபாடு செய்ய"** (2–257–4)

(1 போதினாலும் - புஷ்பங்கள், 2 போதினாலே – விதித்த காலம்)

திருஞானசம்பந்தரின் திருவாழ் கொளி புத்தூர் - (பதிகம் 40இல்) பாடல்களில், எல்லா பாடலிலும் மலரிட்டு வணங்குதலை சிறப்பாகக் கூறுகின்றார். **"கடிகமழ் மாமலரிட்டு", "விரைகமழ் மாமலர்தூவி", "தாஙெடு மாமலரிட்டு", "காரிடு மாமலரிட்டு", "இனமல ரேய்ந்தனதூவி, தளையவிழ் மாமலர் தூவி, தடமலராயினதூவி, சயவிரி மாமலர் தூவி, விரிமலராயினதூவி, தொண்டர்கள் மாமலர் தூவ** என்று குறிப்பிடுகின்றனர்.

திருநாவுக்கரசர் அட்ட மலர்கள் கொண்டு வழிபடுவதை ஐந்தாம் திருமுறையில் 168ம் பதிகத்தில் எல்லாப் பாடல் களிலும் கூறுகின்றார். அட்டபுட்பமலை கொளுமாறு கொண்டட்ட மூர்த்தியை" (5-168-10)

இறைவனை கைம்மலராலும், மனமலராலும், நீரையும், பூவையும் தூவிப் பணிவார்கள் அடியவர்கள்"

**"கரமுன மலராற் புனன்மலர் தூவியே கலந்தேத்துமின்"** (3-295-1)

**"கையின் மலர் கொண்டு நலகாலை யொடுமாலை கருதி"** (3-329-8)

**"கண்ணிலானந்த அருவிநீர் சொரிய**
**கைம்மலர் உச்சிமேற் குவித்து"** (பெரியபுராணம் "தெண்ணிலா")

# 14. திருக்கோயில்களில் திருநீறு அணிதல்

சிவசின்னமாகிய திருநீற்றையும், உருத்திராட்சத்தையும் அணிவதும், சிவநாமத்தை உச்சரிப்பதும் மானிடர்க்கு இன்றியமையாதவொன்றாகும். முத்திக்குரிய சாதனங்களில் திருக்கோயில வழிபாடு, திருவைந்தெழுத்தோதுதல், திருநீறு – சாந்து – உருத்திராட்சம் அணிதல், சடைமுடி தரித்தல், பண்ணொன்றிய பாடல்கள் இசைத்தல், திருத்தொண்டு செய்தல் அவசியமான நடவடிக்கைகளாகும்.

1) **திருஞானசம்பந்தர்**, திருவாலவாய்ப் பதிகத்தில் (202) திருநீற்றின் சிறப்பை 66 தடவைகள் குறிப்பிட்டுள்ளார். அதில் இறைவனுக்குகந்த சிவசின்னங்களை, நாமும் அணிய வேண்டிய அவசியத்தை சிறப்பித்துக் கூறுகின்றார்.

"துயர்கெடுகெனப் பூசுவெண் பொடி" (2-214-2)

2) **திருநாவுக்கரசர்**

"திருவாய் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்" (4-95-6)

"அருநோய்கள்கெட வெண்ணீறணியாராகில்" (6-309-6)

"திருவெண்ணீறணியாத திருவினூரும்" (6-309-5)

3) **சுந்தரமூர்த்தி நாயனார்**

"நீற்றாரு மேனியராய் நினைவார்தம் உள்ளத்தே நிறைந்து தோன்றும்" (7-30-2)

4) **மாணிக்கவாசகர்**

"சுந்தர நீறணிந்தும் மெழுகித் தூய பொன்சித்தி" (திருப்பொற்சுண்ணம் 3)

"வெண்ணீறணிகிலாரைக் கண்டாலம்ம நாமஞ்சுமாறே" (அச்சுப்பத்து – 5)

5) **திருமாளிகைத்தேவர்**

"திருநீறடாவுருத் தண்டேன் என்னுந்
திருநீறு மெய்திருமுண்டத்திட்டு"

**6) கருவூர்த்தேவர்**

"தெள்ளுநீறவணீறென்னுடல் விரும்பும்"

**7) திருமூலர்**

"கங்காளன்பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற்பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே" (திருமந்திரம்)

**8) பட்டினத்தார்**

"பூணீர் உருத்திரசாதனம் நீறெங்கும் பூசுகிலீர்"

**9) சேக்கிழார்**

"மாசிலாத மணித்திகழ் மேனிமேல்
பூசுநீறுபோல் உள்ளும் புனிதர்கள்
தேசினாலெத் திசையும் விளக்கினார்
பேச ஒண்ணாப் பெருமை பிறங்கினார்"

இறைவன் திருநீற்றை பூசியுள்ளான். மகாசங்கார காலத்தில் அனைத்தையும் அழித்து வரும் நீற்றைப் பூசுவான்.

"காடுடைய சுடலைப்பொடி பூசி" (1-1-1)
"சுடலை நீறணிந் தாரழல் ஆடினார்" (2-213-1)
"விரவுநீறு பொன்மார்பினில் விளங்கப் பூசிய வேதியன்" (2-213-4)

இறைவன் திருநீற்றுடன் சந்தனமுங் குங்குமமுஞ் சாந்தும் அணிந்துள்ளான்.

"சுண்ணவெண் சந்தனச்சாந்தும்" (4-2-1)
சந்தனமுங் குங்குமமுஞ் சாந்தும் தோய்ந்த தோளனை"
(6-281-1)

"தண்காட்டச் சந்தனமுந் தவளநீறுந்
தழையணுகுங் குறுங்கொன்றை மாலைசூடி" (6-307-9)

எனவே நாம் நமது குற்றங்களும், வினைகளும் நீங்கி, எமது ஆன்மா நிலையான தூய்மைபெற திருநீற்றை உத்தூளன மாகவோ திரிபுண்டரமாகவோ பூசி, இறைதியானத்துடன் புனிதர்களாவோம்.

மந்திரம் நமச்சிவாயஆக நீறணியப் பெற்றால்
வெந்தறும் வினையும் நோயும் வெவ்வழல் விறகிட்டன்றே"
(4-7-7)

# 15. திருமுறைகளில் திருவைந்தெழுத்து

இறைசக்தியைப் பெறுவதற்கும், முத்தி பெறுவதற்கும் நல்ல வழிகாட்டியாக இருப்பது, மகா மந்திரவடிவமான பஞ்சாக் கரம் ஆகும். முப்போதும் இறைவன் திருமேனி தீண்டி நித்திய நைமித்திய பூசனை செய்யும் அந்தணர்கள்கூட "திருவைந் தெழுத்தே ஓத வேண்டிய திருமந்திரம்" என்கிறார் திருஞான சம்பந்தர்.

"செந்தழலோம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுண் மந்திரம் அஞ்செழுத்துமே" (3-280-2)

"ஓம் நமசிவாய" என்பது இறைவனது தூல பஞ்சாக்கர மந்திரமாகும். இது இறைவனது அருட் திருமேனியின் அங்கங் களாக அமைந்திருப்பதைக் காணலாம்.

ந – திருவடி "ஆடும்படி கேள்நல் லம்பலத்தான் ஐயனே
ம – உந்தி நாடுந் திருவடியி லேநகரம் - கூடு
சி – தோள் மகர முதரம் வளர்தோள் சிகரம்
வா – முகம் பகரு முகம் வாமுடியப் பார்"
ய – முடி (உண்மை விளக்கம் 32)

சிகராதி பஞ்சாக்கரமாகிய "ஓம் சிவாயநம" இறைவனது சூக்கும திருமேனியில் நான்கு திருக்கரங்களையும், முயலகனை மிதித்த திருப்பாதத்தையும் உணர்த்தும்.

சி – துடி (வலது) "சேர்க்கும் துடிசிகரஞ் சிக்கனவா வீசுகரம்
வா – வீசுகரம் (இடது) ஆர்க்கும் யகரம் அபயகரம் - பார்க்கிலிறைக்
ய – அபயகரம் (வலது) கங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்
ந – அக்னி (இடது) தங்கு மகரமது தான்"
ம – மிதித்த திருப்பாதம் (உண்மை விளக்கம், 33)

நமசிவாய, சிவாயநம, சிவாயசிவ, சிவசிவ, சிவ ஆகிய மந்திரங்கள் நம்மை நல்வழிப்படுத்துகின்றன.

நகராதி பஞ்சாக்கரமாகிய "நமசிவாய" உலக இன்ப உபாய மார்க்கத்தார் ஓதுவதும், ஆன்ம ஈடேற்றத்தின் பொருட்டு சிகராதி பஞ்சாக்கரமாகிய சிவாயநம ஓதுவதும் நன்மார்க்க மாகும். பொதுவாக பஞ்சாக்கரத்தில்

சி – சிவம்

ந – திரோதான சத்தி

வ – அருட்சக்தி

ம – மும்மலம்

ய – ஆன்மா

என்ற உண்மையை விளக்குவதாகும்.

பஞ்சாக்கர வகைகளாவன

i. தூல பஞ்சாக்கரம் - நமசிவாய
ii. சூக்கும பஞ்சாக்கரம் - சிவாயநம
iii. காரண பஞ்சாக்கரம் - சிவாயசிவ
iv. மகாகாரண பஞ்சாக்கரம் - சிவ
v. மகாமனு பஞ்சாக்கரம் - சி

**திருஞானசம்பந்தர் குறிப்பிடும் பஞ்சாக்கரப் பாடல்கள்**

(அ) திருவைந்தெழுத்து உணர்த்தும் "வசி"

"வசி வல வனது இடம்" 1-126-2

"வசி யாற்ற மாமதியுமாம்" 3-307-2

"மனை தோறும் இசைபாடி வசி பேசும்" 3-335-2

"கலந்தருள் பெற்றது மாவசியே
காழியரனடி மா வசியே" 3-371-2

(ஆ) திருவைந் தெழுத்தாம் "நமசிவாய" மந்திரம்

"நக்கர் நாமம் நமசிவாயவே" 3-267-9

"நமசிவாயத் திருப்பதிகம் (பாடல்கள் முழுவதும்)
3-307 யாவும்

(இ) திருவைந் தெழுத்து "சிவாய" மந்திரம்

"நண் பாற் சிவாய வெனா நாலூர் மயானத்தே" 2-182-10

(ஈ) திருவைந் தெழுத்து மந்திரம்
பஞ்சாக்கரத் திருப்பதிகம் (பாடல்கள் முழுவதும்)
3 – 280 யாவும்
"அஞ்செழுத்துரைக்க அருளினன்" 3-377-8
"நாவணங் கியல்பாமஞ் செழுத்தோதி" 3-378-8
"அருந்துயர் கெடுமவர் நாமமே சிந்தைசெய்
நன்னெஞ்சமே 3-350-1

திருநாவுக்கரசநாயனார் தரும் பஞ்சாக்கரப் பாடல்கள்

(அ) திருவைந்தெழுத்தாம் "நமசிவாய" பாடல்கள்
நமச்சிவாயத் திருப்பதிகம் (பாடல்கள் முழுவதும்) 4–11 யாவும்
"நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்" 5-204-2
"சீரார் நமச்சிவாயஞ் சொல்லவல்லோம்" 6-312-4
"மந்திர நமச்சிவாய வாக நீறணியப் பெற்றால்" 4-77-4
"எந்தையர் திருநாம நமச்சிவாய" 6-307-10
"நமச்சிவாய என்பாருள ரேல்" 5-211-22
"நின் நாமம் பரவி நமச்சிவாய என்னும் அஞ்செழுத்தால்"
4-104-3

(ஆ) திருவைந்தெழுத்து சிவாயநம /
"சித்த மொருக்கிச் சிவாயநம வென்றிருக்கினல்லால்" 4-95-5
"சிவாயநம வென்று நல்ல மேவிய நாதனடி" 5-157-6
"மண்ணினார் மறவாது சிவாய வென்று எண்ணினர்க்கு"
5-165-6
"திருவாய் பொலியச் சிவாயநமவென்று நீறணிந்தேன்"
4-95-6
"திகையாதே சிவாயநம வென்னும் சிந்தைச் சுருதியினன்"
6-276-8

(இ) திருவைந்தெழுத்து நாமம்
"மழுவலான் திருநாமம் மகிழ்ந்துரைத்து (5-173-7)
படைக்கலமாகவுன் நாமத்தெழுத்தஞ்சென் நாவில்
கொண்டேன்" 4-81-8
"அஞ்செழுத்தோதி நாளு மரனடிக் கன்பதாகும்" 4-70-5
"பதத்தெழு மந்திர மஞ்செழுத்தோதி" 4-108-2
திருநாமந்தான் நாவில் நூறுநூறாயிரம் நண்ணினார்
(5-179-1)

நின்னாமத் திருவெழுத் தஞ்சுந் தோன்ற
வருளுமையாறரே" 5-141-3
"எண்ணில் நாமங் களோதி எழுத்தஞ்சும்" 5-160-5
"அருந்தவந் தருமஞ்செழுத் தோதினாய்" 5-174-4
"வஞ்சனையா லஞ்செழுத்தும் வழுத்துவார்க்கு
சேயானை" 6-264-4
"மாற்றேனெழுத்தஞ்சு மென்ற நாவின் மறவேன்" 6-261-2
"பதமஞ்சும் கதியஞ்சும் செப்பினாரும்" 6-230-7
"நாமவெழுத் தஞ்சாய நம்பர் போலும்" 6-267-6
ஆலைப்படு கரும்பின் சாறுபோல, அண்ணிக்கு
அஞ்செழுத்தி நாமத்தான் 6-266-2
"வானவர் கோன் திருநாமம் அஞ்சுஞ்சொல்லி" 6-276-6
அஞ்செழுத்து நினைவார்க் கென்றும் மருத்துவன்காண்"
6-278-9
"அஞ்செழுத்தும் வாய்நலிய வல்லோரக்கென்றும்
சிறந்தானை" 6-280-6
"திருநாமம் ஐந்தெழுத்தும் செப்பாராகில்" 6-309-6
திருநாமம் அஞ்சுஞ்சொல்லி" 6–275-6

**சுந்தரமூர்த்தி நாயனார் பாடல்களில் அஞ்செழுத்து**

"நமச்சிவாயப் பதிகம்" ("மற்றுப்பெற்றெனக்கு") 7-48 யாவும்
"அந்தியும் நண்பகலும் அஞ்சுபதஞ் சொல்லி" 7-83-1
"அஞ்சினை யொன்றிநின்று அவர் கொண்டடிசேர்வறியா" 7-100-6
(பஞ்சேந்திரியங்கள் அல்லது பஞ்சாக்கரம் செபித்தலில் மனம் ஒருமுகப்பட்டு நின்று)

**மாணிக்கவாசக சுவாமிகளின் பாடல்களில் திருவைந்தெழுத்து**

**"நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க"** (நமச்சிவாய பதிகம்)
**"அஞ்செழுத்தின் புணை பிடித்துக் கிடக்கின்றேனை"** (திருச்சதகம் 27)
**"போற்றியோம் நமச்சிவாய"** (திருச்சதகம் 66)
**"நமச்சிவாய என்று உன்னடி பணியர்"** (மாயனே)
**"இப்பிறப்பினிலிணை மலர்கொய்து இயல்போடஞ்செழுத்தோதி"**
(அற்புதப்பத்து – 7)
**"சிவாயநமவென்று உன்னடிபணியர்"** (செத்திலாப் பத்து)

“நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநமஎனப் பெற்றேன்”

(திருவேசரவு 10)

“எண்ணிலேன் திருநாமவஞ்செழுத்து” (அதிசயப்பத்து 6)

**கருவூர்த்தேவரின் திருவிசைப்பாக்களில் திருவைந்தெழுத்து**

“அன்பொடு தன்னை அஞ்செழுத்தின் சொற்பதத்துள்வைத்து”

(அற்புதத்தெய்வம்)

**திருமாளிகைத்தேவரின் திருவிசைப்பாடல்களில் திருவைந்தெழுத்து**

“ஐந்தெழுத்தும் பிதற்றிப்பிணிதீர வெண்ணீறிடப்பெற்றேன்”

(“உற்றாய்”)

**திருமூலர் திருமந்திரம் பஞ்சாக்கர பாடல்கள்**

“அஞ்செழுத்தாலே அமர்ந்தனன் நந்தியும்
அஞ்செழுத்தாலே அமர்ந்தபஞ் சாக்கரம்
அஞ்செழுத்தாகிய அக்கர சக்கரம்
அஞ்செழுத்துள்ளே அமர்ந்திருந்தானே”
அஞ்செழுத்தாலைந்து பூதம் படைத்தனன்
அஞ்செழுத்தாற்பல யோனி படைத்தனன்
அஞ்செழுத்தாலிவ் அகலிடந் தாங்கினன்
அஞ்செழுத்தாலே அமர்ந்துநின் றானே.

ஐந்தின் பெருமையே அகலிட மாவதும்
ஐந்தின் பெருமையே ஆலய மாவதும்
ஐந்தின் பெருமையே அறவோன் வழக்கமும்
ஐந்தின் வகைசெயப் பாலனு மாமே.

**பெரியபுராணம் - சேக்கிழார்**

“நெஞ்ச மீசனைக் காண்பதே விரும்பி
நிரந்தரம் திருவாக்கினிய நிகழ்வ
தஞ்செழுத்து மேயாக” (சேக்கிழார்)

**பட்டினத்தார் பாடல்களில் திருவைந்தெழுத்து**

“நின்னஞ்செழுத்தைச் சொல்லாபிழையும்” (9 “கல்லாப்பிழையும்”)
“எழுத்தஞ்சும் சொல்லேன்” (11 “வரிக்கோல”)
“ஐந்தெழுத்தைச் செபியாமல்” (60 “தனியாதிரு...”)
“நல்லதிருவைந்தெழுத்துண்டு” (116 “உரைக்கை..”)

"வாய்க்குண்டு மந்தி பஞ்சாட்சரம்" (127 "நாய்க்குண்டு)

**திருமூலரின் திருமந்திரப் பாடல்களில் திருவைந்தெழுத்து**

தூல பஞ்சாக்கரம் "நமச்சிவாய" பற்றிய பாடல்கள் (2649 – 2658)
சூக்கும பஞ்சாக்கரம் "சிவாயநம" பற்றிய பாடல்கள் (2659-2668)
அதிசூக்கும பஞ்சாக்கரம் "சிவசிவ" பற்றிய பாடல்கள் (2669-2673)
"தேறாச் சிவாய நமவெனத் தேறியோ" (பாடல் 2460)
"நன்று கண்டீர் இனி நமச்சிவாயப் பழம்" (பாடல் 2962)

சேக்கிழாரின் பெரிய புராணத்தில் திருவைந்தெழுத்து
"எம்பிரான் எழுத்தஞ்சுந் தொடுத்தமுறை யேழிசையின்"
(ஆனாயனார் புராணம் - 14)
"எழுத்தஞ்சுந் தூயவிசைக்கிளை கொள்ளும்"
(ஆனாயனார் புராணம் - 26)
"அஞ்செழுத்தினிசைபெருகக் கூறிய பட்டடை"
(ஆனாயனார் புராணம் - 25)
"ஆதிமந்திரம் அஞ்செழுத்தோதுவார்"
(திருஞானசம்பந்தர் புராணம் 698)
"வாழியஞ்செழுத்தோதி வளர்கவே" (திருஞானசம்பந்தர் புராணம் 823)
"ஆயவந்தணர் அருமறை உருத்திரங்கொண்டு"
(உருதிரபசுபதி நாயனார் புராணம் 4)
"கொள்ளுமன்பினில் உருத்திரங் குறிப்பொடு பயின்றார்"
(உருதிரபசுபதி நாயனார் புராணம் 6)
"சித்தந்தெளியச் சிவனஞ்செழுத்தோது நித்தந்
நியமமெனப்போற்று" (சோமசிமாறநாயனார் புராணம் 3)
"தேடிய வயனுமாலுந் தெளிவுறா வைந்தெழுத்தும்"
(திருத்தாட்கொண்ட புராணம் 71)

எனவே நாம் அஞ்செழுத்தை ஓதி உணர்ந்து கொண்டால், எமது உள்ளத்தே இறைவனைக் காணும் பேறைப் பெறுவோம்.

**"ஏது மொன்று மறிவில ராயினும்**
**ஓதி யஞ்செழுத் தும்முணர் வார்கட்குப்**
**பேத மின்றி யவரவ ருள்ளத்தே**
**மாதுந் தாமு மகிழ்வாமாற் பேறரே"** (5-174-1)

# 16. திருமுறைகளில் நாயன்மார்கள்

பொதுவாக திருமுறைப்பாடல்களில் நாயன்மார்கள் பலரும் சமகாலத்தில் அல்லது முன்னர் வாழ்ந்த அடியார் பெருமையைக் குறிப்பிட்டுள்ளனர். இவர்கள் வெவ்வேறு நூற்றாண்டுகளில் வாழ்ந்தவர்கள். திருத்தலங்களைத் தரிசித்தும், திருப்பணிகள் செய்தும் சைவ சமயத்தின் பெருமைகளை நிலை நாட்டினார்கள். சுந்தரமூர்த்தி சுவாமிகளும் நம்பியாண்டார் நம்பியும், சேக்கிழாரும் 63 நாயன்மார்களையும் பாடியுள்ளனர். அவர்கள் பாடிய நாயன்மார்களின் பொதுவான இறைபணிகளை நாம் நோக்குவோம்.

- 63 நாயன்மார்களில் அடியார்க்கு தொண்டு செய்து பேறடைந்தவர்கள்:- அப்பூதியடிகள், கணநாதநாயனார், புகழ்த்துணை நாயனார், இடங்கழிநாயனார், நேசநாயானர், நரசிங்கமுனையர், பெருமிழலைக்குறும்பர், சடையனார், இசைஞானியார், கூற்றுவநாயனார் என்போர்.

- சமணருடன் எதிர்ப்புக்கொண்டு இறைவன் புகழ்பாடி பணி செய்தவர்கள்:- மூர்த்திநாயனார், நமிநந்தி அடிகள், தண்டி யடிகள், திருநாவுக்கரசர். திருஞானசம்பந்தர், மங்கையற்கரசி நாயனார், குலச்சிறை நாயனார்.

- திருக்கோயில்களைக் கட்டி பணி செய்தவர்கள்:- கோச்செங்கட் சோழர், காரிநாயனார்.

- திருக்கோவிற்றொண்டு செய்தவர்கள்:- மூர்த்திநாயனார், நமிநந்தி அடிகள், கூற்றுவநாயனார், முருகநாயனார், திருநாளைப்போவார்.

- இசைக்கருவிகள் வாசித்து இறைவன் புகழ்பாடியவர்கள்: திருநீலகண்ட யாழ்ப்பாணர், ஆனாயநாயனார்.

- மனக்கோயிலில் இறைவனை இருத்தி வழிபட்டவர்கள்:- பூசலார் நாயனார், வாயிலார் நாயனார்.

- பஞ்சாக்கரம், உருத்திர மந்திரம், ஓதி இறைவழிபாடு செய்தவர்கள்:-
உருத்திரபசுபதியார், சிறப்புலி நாயனார், சோமாசி மாறர், திருமூலர்.

- சிவவேடத்துக்கு மதிப்புக்கொடுத்து சிவனடி சேர்ந்தவர்:- மெய்ப்பொருள்நாயனார், ஏனாதி நாயனார்.

- செயற்கரியன செய்து இறைபதம் அடைந்தோர்:-
கண்ணப்பர், புகழ்சோழர், சிறுத்தொண்டீர், குங்குலியகலயர், திருநீலநக்கர்,கலியநாயனார், சண்டேஸ்வரர், கழற்சிங்கர், அரிவாட்டர், கலிக்கம்பர், கோட்புலி நாயனார்.

- திருத்தலங்கள் பல தரிசித்தவர்கள்:- காரைக்காலம்மையார், ஐயடிகள் காடவர்கோன், திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர், திருநீலகண்ட யாழ்ப்பாணர், சுந்தரமூர்த்தி நாயனார், சேரமான் பெருமாள் நாயனார், விறன்மிண்டர்.

- சிவபிரானின் மாறு வேடத்தில் சோதிக்கப்பட்டவர்கள்:- திருநீலநக்கர், இளையான்குடி மாறர், இயற்பகையார், அமர்நீதி நாயனார், திருக்குறிப்புத்தொண்டர், அதிபத்த நாயனார், மானக்கஞ்சாறர், ஏயர்கோன் - கலிக்காமர், சுந்தரமூர்த்திநாயனார்.

- அதிதீவிர இறைபக்தியுடையவர்கள்:- நந்தனார், சக்திநாயனார், எறிபத்தர், முனையடுவார் நாயனார்.

- இவர்களுடன் தொகையடியார் ஒன்பதின்மர், தில்லை வாழந்தணர் மூவாயிரவர்.

# திருமுறைகளில் வரும் நாயன்மார்கள்

1) திருஞானசம்பந்தர் தனது பாடல்களில் குறிப்பிடும்

| நாயன்மார்கள் | பாடல் வரிகள் | திரு முறை | பதிக எண் / பாடல் |
|---|---|---|---|
| 1) சண்டேசுரநாயனார் | (சண்டிக்கருளிலர் போலும்) | 2 | 201-2 |
| | (பீரடைந்த பாலதாட்ட..) | 1 | 48-7 |
| | (இலிங்கம் மண்ணியின்கண் பாலாட்டும்...) | 1 | 62-4 |
| | (மணலிலிங் கந்தொடங்கிய வானிரையிற் பால்) | 3 | 324-3 |
| | (சீறியன்பு செகுந்தனன் பாலையே) | 3 | 373-5 |
| | அங்கொர் கோடலியால் இரும்பு பிடித்தவர்) | 4 | 103-5 |
| 2) கோச்செங்கட் சோழர் | (கோச்செங்கணாற் கருள்செய்...) | 1 | 48-6 |
| | (சிலந்தி கோச்செங்கட் சோழனாகச்..) | 2 | 199-7 |
| | (கோச்செங்கணான் செய் கோயிலே) | 3 | 276-4 |
| | (கண் வளவன்முன் செய்த கோயிலே) | 3 | 276-2 |
| | (செங்கண்ணவன் செய் கோயில்) | 3 | 277-1 |
| 3) கண்ணப்பநாயனார் | (கண் இடந்து அப்ப...) | 3 | 293-7 |
| | (வாய்கலசம்ஆக வழிபாடு செய்யும் வேடன்) | 3 | 327-4 |
| | (கண்ணப்பருக்கு அருள்செய்த கயிலை...) | 3 | 367-7 |
| | (இருங்கண் இடந்தபடி அப்பினனே) | 3 | 371-8 |
| 4) குலச்சிறைநாயனார் | (குலச்சிறைகுலாவி நின்றேத்தும்) | 3 | 378-2 |
| | (குணங்கொடு பணியும் குலச்சிறை) | 3 | 378-4 |
| | (தவம்பணி குலச்சிறை பரவும்) | 3 | 378-6 |
| | (தொழுதெழு குலச்சிறை போற்ற) | 3 | 378-8 |
| | (குலச்சிறை கருதி நின்றேத்த) | 3 | 378-10 |
| 5) மங்கையர்க்கர சியார் | (மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை) | 3 | 378-1 |
| | (பந்தணை விரலாள் பாண்டிமாதேவி) | 3 | 378-3 |
| | (பாண்டிமாதேவி நாடொறும் பணிந்து...) | 3 | 378-5 |
| | (பத்தியார்க்கின்ற பாண்டிமாதேவி..) | 3 | 378-7 |
| | (பாண்டிமாதேவி பாங்கினாற் பணிசெய்து...) | 3 | 378-9 |
| | (பாண்டிமாதேவி குலச்சிறை யெனுமிருவர்) | 3 | 379-11 |
| | (மானினேர்விழி.... தேவிகேள்) | 3 | 297-1 |
| 6) சிறுத்தொண்ட நாயனார் | (திருச்செங் காட்டங்குடி) (321 பதிகம் யாவற்றிலும் | 3 | 321-1-11 |
| | பொடி நுகரும் சிறுத்தொண்டர்க் கருள் செய்யும் | 1 | 61-10 |
| 7) தண்டியடிகள் நாயனார் | (அண்டர் தொழு சண்டிபணி..) | 3 | 326-10 |
| 8) திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் | (தானு எனை யாளுடையான்...) | 1 | 62-9 |
| | (தாரம் உய்த்தது பாணற்கருளோடே) | 3 | 259-3 |
| 9) தில்லைவாழந் தணர்கள் | (சீலத்தார் தொழுதேத்தும்.... | 3 | 259-3 |
| | (தில்லையார் தொழுதேத்தும்....) | 3 | 259-5 |

| நாயன்மார்கள் | பாடல் வரிகள் | திரு முறை | பதிக எண் / பாடல் |
|---|---|---|---|
| 10) நமிநந்தியடிகள் | (நாவியல்சீர் நமிநந்தியடிகளுக்கு..) | 1 | 62-6 |
| 11) திருநீலநக்க நாயனார் | (சாத்தமங்கை அடிகள் நக்கன்...) | 3 | 316-2 |
| | (நிறையினார் நீலநக்கன்.....) | 3 | 316-11 |
| 12) புகழ்த்துணை நாயனார் | (அலந்த அடியானற்றைக் கன்றோர் காசெய்தி) | 2 | 199-7 |
| 13) முருகநாயனர் | (அடிபரவிக் குறிப்பறி முருகன் செய்கோலம்கண்டு) | 2 | 228-3 |
| | (முருகன் முப்போதும் செய்முடிமேல் வாசமாமலர் உடையார்) | 2 | 228-5 |
| 14) அமர் நீதிநாயனார் | (கோவணம் கொண்டு கூத்தாடும் படிறனார்) | 3 | 379-1 |

## திருமுறைகளில் திருநாவுக்கரசர் குறிப்பிடும் அடியார்கள்

| நாயன்மார்கள் | பாடல் வரிகள் | திரு முறை | பதிக எண் / பாடல் |
|---|---|---|---|
| அப்பூதியடிகள் | (அழலோம்பும் அப்பூதி | 4 | 12-10 |
| சண்டீச்சுரர் | (தாதை பாய்வான் காலற வெறியக் - கண்டு சண்டியார்க் கருள் செய்து) | 4 | 48-4 |
| | (தன்தாதை தாளைப் பெருங்கொடு மழுவால்வீசா) | 4 | 49-3 |
| | (சண்டியீசுரவர்க்கருள் செய்த....) | 5 | 184-1 |
| | (தாதையைத் தாளறவீசிய சண்டிநாயகனுக்கருள் செய்தவன்) | 5 | 187-8 |
| | (ஆங்கனைந்த சண்டிக்குமருளி......) | 6 | 232-10 |
| | (தாதுமலர் சண்டிக்கு கொடுத்த நாளோ....) | 6 | 247-10 |
| கோச்சொல் கட்சோழர் | (சண்டனை நல்லண்டர் தொழச் செய்தான்) | 6 | 287-6 |
| | (சிலந்தியை யரசதாள வருளினாயென்று) | 4 | 62-9 |
| | (சிலந்தி தன்னை முடியுடை யரசனாக்கி) | 4 | 65-3 |
| | (சிலந்தியை யரையனாக்கி சீர்மைகளருளவல்லீர்) | 4 | 70-2 |
| | (சிலந்தியு மானைக் காவிற்றிருநிழற்பந்தர்செய்து) | 4 | 49-4 |
| | (சிலந்திதனக்கருள் செய்த தேவதேவை) | 6 | 234-5 |
| | (சிலந்திக்கருண் முன்னம் செய்தான்) | 6 | 237-3 |
| | (சிலந்திக்கு பாராள் செல்வம் ஈந்தவன்காண்) | 6 | 279-6 |
| | (சிலந்திக்கு மரசளித்த செல்வன்றன்னை | 6 | 288-8 |
| | (திருவானைக்காவிலோர் சிலந்திக்கந்நாள் - கோச்சோழர் குலத்தரசு கொடுத்தார்) | 6 | 289-8 |
| | (சிலந்திதன் வாயினூலாற்... சித்தியினாலர சாண்ட சிறப்பு) | 6 | 297-6 |

| நாயன்மார்கள் | பாடல் வரிகள் | திரு முறை | பதிக எண் / பாடல் |
|---|---|---|---|
| சாக்கியனார் | (கல்லினாலெறிந்து கஞ்சி தாமுனுஞ் சாக்கியனார்) | 4 | 49-6 |
| கண்ணப்பர் | (காப்பதோர் வில்லும் அம்பும் கையதோர் இறைச்சிப்பாரம் – தோற்பெருஞ் செருப்புத் தொட்டு தூயவாய்க் கலசமாட்டி) | 4 | 49-7 |
| | (கண்ணப்பன் கண்ணப்பக்கண்டு....) | 6 | 226-6 |
| | (கண்ணப்ப விண்ணப்பக் கொடுத்தான் கண்டாய்) | 6 | 295-6 |
| | (கண்ணப்பர்க் கருள் செய்த காளை கண்டாய..) | 6 | 253-9 |
| கணம்புல்லர் | (கணம்புல்லர்க் கருள் செய்து...) | 4 | 49-9 |
| | (கணம்புல்லன் கருத்துகந்தார்...) | 6 | 226-7 |
| திருஞானசம்பந்தர் | (கழுமல வூர்க்கம்பொன் ஆயிரம் கொடுப்பர் போலும்) | 4 | 56-1 |
| | (பாடிப்பெற்ற பரிசில் பழங்காசு – வாடிவாட்டந்தவிர்ப்பார் அவரைப்போல) | 5 | 164-7 |
| | (திறக்கப்பாடிய என்னினுஞ் செந்தமிழ் உறைப்புப்பாடி அடைப்பித்தார்) | 5 | 164-8 |
| நமிநந்தியடிகள் | (நாதனடித் தொண்டனம்பி நந்தி) | 4 | 103-2 |
| | (அடித்தொண்டன் நந்தியென்பானூர்) | 4 | 103-3 |
| | (நந்தி பணிகொண்டருளும் நம்பன்தன்னை) | 6 | 248-4 |
| | பொடிகொண்டனிவளர்க்கிரு ளொக்கு நந்தி) (கொடிகொள்–நாவுக்) | 4 | 103-6 |
| அமர்நீதி நாயனார் | (கீட் கொண்டகோவணங் காவென்று.... ...மனைவியொடும் அங்கோர் வாணிகனை ஆட்கொண்ட வார்த்தை) | 4 | 98-7 |
| மாணிக்கவாசகர் | நரியைக் குதிரைசெய்வானும் | 4 | 98-7 |

**திருமுறைகளில் மாணிக்கவாசக சுவாமிகள் குறிப்பிடும் அடியார்கள்**

கண்ணப்பர் (கண்ணப்பனொப்பதோரன்பின்மை கண்டபின்)
- திருக்கோத்தும்பி 4

தில்லைவாழந்தணர் (தில்லையம்பலத்து மூவாயிரவர் வணங்க)
- திருக்கோவையார் 72

அடியவர்கள் ("நேசமுடைய அடியவர்கள் நின்றுநிலவுக")
- திருப்பொற்சுண்ணம் 64

**பூந்துருத்தி காடநம்பி (திருவிசைப்பா) குறிப்பிடும் நாயன்மார்கள்**

- கடியார், கணம்புல்லர், கண்ணப்பர், மூவாயிரவர் ("கடியார் கணம்புல்லர் கண்ணப்பரென்று...") – "கடியார்.."
- திருநாவுக்கரசர் ("பழனத்தாமூர் நாவுக்கரசை...) - "அல்லியம்.."
- திருஞானசம்பந்தர் ("எமையாளுஞ்சம்பந்தன் காழியர் கோன்..) – "எம்பந்த"
- சேரமான் பெருமானாயனார், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ("களையாவுடலோடு சேரமானாரூரன்...) - "களையா.."
- தில்லைவாழந்தணர்கள் (முடியாத முத்தீவேள்வி மூவாயிரவரொடும்) – "கடியார்.."
  (மூவாயிரவரோடும் அளையா விளையாடும்" – "களையா"

**கண்டராதித்தர் (திருவிசைப்பா) குறிக்கும் நாயன்மார்கள்**

தில்லைவாழந்தணர்கள் (அந்தணாளர் ஆகுதிவேட்டுயர்வார் தில்லை மூவாயிரவர்...) - "ஓவாமுத்தி..."

(நான்மறையார் மூவாயிரவர்...) - "முத்தீயாளர்"

**திருவாலியமுதனார் (திருவிசைப்பா) குறிப்பிடும் நாயன்மார்கள்**

- கோச்செங்கட்சோழர் - ("சிலந்தியை யரசாள்க வென்று") – ("அலமந்து போயினேன்"
- ஆரூர்நம்பி – ("ஆரூர் நம்பியவர்களிசைபாட") – ("நெடிய சமணும்..")
- அந்தணர் - ("அந்தணர் தில்லையம்பலத்துளேத்த") – ("கூத்தனை...")

சேந்தனார் (திருப்பல்லாண்டு) குறிப்பிடும் நாயன்மார்கள் சண்டேச்சரர் ("தாதையைத் தாளற வீசிய சண்டிக்கு..") – "தாதையை...."

நம்பியாண்டார் நம்பி அருளிச்செய்த திருத்தொண்டர் திருவந்தாதி, சேக்கிழார் அருளிச்செய்த திருத்தொண்டர் பெரிய புராணம் இரண்டிலும் 63 நாயன்மார்களையும் பாடியுள்ளனர்.

**திருமுறைகளில் சுந்தரமூர்த்தி நாயனார் குறிப்பிடும் அடியார்கள்**

- தில்லைவாழந்தணர், திருநீலகண்டர், இயற்பகை நாயனார், இளையான்குடிமாறர், மெய்ப்பொருள் நாயனார், விறன்மிண்டர், அமர்நீதி நாயனார். 7-39-1
- எறிபத்தர், ஏநாதிநாதர், கண்ணப்பர், குங்கிலியக் கலயர், மானக்கஞ்சாறர், அரிவாட்டர், (தாயனார்), ஆனாயநாயனார். 7-39-2
- மூர்த்திநாயனார், முருகன், உருத்திபசுபதி, திருநாளைப் போவார், திருக்குறிப்புத்தொண்டர், சண்டேசுரர் (விசாரதருமர்) 7-39-3
- திருநாவுக்கரசர், குலச்சிறை, பெருமிழலைக்குறும்பர், காரைக்காலம்மையார், அப்பூதியடிகள், திருநீலநக்கர், நமிநந்தி 7-39-4
- திருஞானசம்பந்தர், ஏயர்கோன் - கலிக்காமர், திருமூலர், தண்டியடிகள், மூர்க்கநாயனார், சோமாசி மாறர். 7-39-5

- சாக்கியர், சிறப்புலி, சிறுத்தொண்டர், கழற்றறிவார் (சேரமான் பெருமாள்), கணநாதர், கூற்றுவநாயனார் 7-39-6
- தமிழ்ச்சங்கப்புலவர், புகழ்ச்சோழர், நரசிங்கமுனையர், அதிபத்தர், கலிக்கம்பர், கலியநாயனார், சத்தி நாயனார், ஐயடிகள் காடவர்கோன். 7-39-7
- கணம்புல்லர், காரிநாயனார், நெடுமாறர், வாயிலார், முனையடுவார். 7-39-8
- கழற்சிங்கர், இடங்கழிநாயனார், செருந்துணை நாயனார், புகழ்த்துணை நாயனார், கோட்புலி நாயனார். 7-39-9
- பத்தராய்ப்பணிவார், பரமனையே பாடுவார், சித்தத்தை சிவன்பால் வைத்தார், திருவாரூரிற் பிறந்தார், முப்போதும் திருமேனி தீண்டுவார், முனிவர்கள், அப்பாலும் அடிசார்ந்தார். 7-39-10
- பூசலார், மங்கையர்க்கரசியார், நேசனார், கோச்செங்கட் சோழர், திருநீலகண்ட யாழ்ப்பாணர், சடையனார், இசைஞானியர். 7-39-11
- புகழ்த்துணை நாயனார் ("புகழ்த்துணை புகழச்செய்து கந்தீர்) 7-9-6
- சண்டேச்சுவரர் (அடிசண்டியைத் தாமெனவைத்து கந்தார்) 7-17-4

  (இண்டைமலர்.... துண்டமிடு சண்டியரு) 7-16-3

  ("தாதைதாளற எறிந்த சண்டிக்கும்) 7-55-3

  (எறிந்த சண்டி) 7-88-6
- நரசிங்கமுனையர் (நரசிங்கமுனையரையனாதரித்து) 7-17-11
- கோட்புலி நாயனார் (கொடிநன் கோட்புலி சென்னி) 7-15-10
- கண்ணப்பர் (இடந்த கண்ணப்பன்) 7-53-6

  (கணைகொள் கண்ணப்பன்) 7-65-2

# 17. திருமுறைகளும் சிவனடியார் 23 இலக்கணமும்

எமது சைவப் பண்பாட்டில் புலால் அருந்தாமல், உயிர்களைக் கொல்லாமல், உள்ளம் - உடல் இரண்டும் தூயதாய் வைத்துக்கொண்டு சிவநாமஞ்சொல்லி திருநீறணிந்து, உருத்திராக்கம் பூண்டு, நீர் - பூ - மாலைகள் சாத்தி, கற்பூர தீபங்கள் காட்டி திருக்கோயில் வழிபாடு செய்தும், திருப்பணிகள் செய்தும், அன்புடன் இன்முகங்காட்டி சிவனடியார்கள் - குருவினைப் போற்றிப் பணிந்தும், குரு – லிங்கம் - சங்கம வழிபாட்டில் நின்று வாழ்தல் இன்றியமையாதது.

குருவினைப் போற்றி, அவர் சொற்படி நடத்தல் - சிந்தித்தல் அவசியம் என்பதை, திருமந்திரப் பாடல் உணர்த்து கின்றது.

**"தெளிவு குருவின் திருவார்த்தை காணல்**
**தெளிவு குருவின் திருவாரத்தை கேட்டல்**
**தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்**
**தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே"**

உடற் சுத்தியுடன் விபூதி – உருத்திராட்சம் அணிந்து காவியுடை தரித்தல் அடியார்களுக்கு அழகாகும். இத்திருக் கோலத்துடன் இறைபுகழ் பாடுபவர்கள் குற்றமற்றவர்களாவர்.

**"கோலத்தாற் பாடுவார் குற்றம் அற்றார்களே"** என்றார் சம்பந்தர். – (2-286-11)

திருநீறணிதலையும் உருத்திராக்கம் பூணுதலையும், சடை தரித்தலையும் சிவவேடமாகப் போற்றி முத்தியடைந்தவர் ஏனாதி நாயனார். சடைமுடியே சிவவேடமாகப் போற்றியவர் புகழ்ச் சோழனார். திருநீறு - உருத்திராக்கம் - சடை - காவி - ஓடு கொண்ட உருவப் பொலிவை சிவவேடமாகப் போற்றியவர் மெய்ப்பொருள்

நாயனார். நிறைந்த மனத்தினராய் பூவும் நீருங்கொண்டு நைவேத்தியம் சமர்ப்பித்து பாமாலை சாத்தி, வாத்திய இன்னிசையுடன் இறைவனைப் பணிந்து பேரின்பம் அடைவோம்.

**"நிறையுடை நெஞ்சுளும் நீருளும் பூவுளும்**
**பறையுடை முழவுளும் பலியுளும் பாட்டுளும்"** (2-284-4)

இவ்வாறு இறைவனைப் பணிந்து வருவதை, இறைவன் விரும்புவான்.

**"கழல் பேணவல்லார் சீலமும் செய்கையும் கண்டு காப்பார்"** (7-19-9)

இறைவனை கணமும் மறக்காது நெஞ்சில் ஏற்றிப் போற்றும் அடியார்களின் துன்பங்கள் யாவும் மறைந்து, இன்பமே சூழ்ந்திடும். இதை

**"பிறப்பு மூப்பு பெரும்பசி வான் பிணி**
**இறப்பு நீங்கியிங் கின்பம் வந்தெய்திடும்**
**சிறப்பர் சேரியுள் செந்நெறியான் கழல்**
**மறப்பதின்றி மனத்தினுள் வைக்கவே"** என்ற பாடலில் திருநாவுக்கரசர் குறிப்பிடுகின்றார். (5-191-3)

இவ்வாறு திருமுறை நாடி நிற்கும் அடியார்களின் இலக்கணம் பத்து என்பதை மாணிக்கவாசகர் தனது திருச்சதகம் (53) பாடலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

**"எட்டினோ டிரண்டும் அறியேனையே"**

சிவபுராண படன விதியில் கூறப்படும் அடியார் இலக்கணங்கள் 23.

**(அ) புறத்திலக்கணம் 10**

1) சிவசின்னங்களான விபூதி - உருத்திராக்கம் - காவி தரித்திருத்தல்.

**“தூயவெண்ணீறு துதைந்தபொன்மேனியும் தாழ்வடமும்**
**நாயகன்சேவடி தைவருஞ் சிந்தையும் நைந்துருகி**
**பாய்பதுபோல் அன்பு பொழி கண்ணும் செஞ்சொல்**
**மேயகண்ணும் பதிகச் சொல்மேய செல்வாயும் உடையார்”**

- பெரியபுராணம்

**“திருநீறுஞ் சாதனமுங் கண்டால்...”** – நாவுக்கரசர் (6-275-3)

2) குருவை வழிபடல்

**“தெளிவு குருவின் திருமேனி காணல்.... தெளிவு குருவுரு சிந்தித்தல்”** – திருமந்திரம்

3) சிவபெருமானைத் தோத்திரஞ்செய்தல்

**“தமிழோடிசை பாடல் மறந்தறியேன்”** நாவுக்கரசர் - (1-1-6)

4) சிவநாமம் உச்சரித்தல்

**“நற்றவா உனைநான் மறக்கினும் சொல்லுநா நமச்சிவாயவே”** (7-48-1)

**“திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பாராகில்....”** (6-309-6)

5) சிவபூசை செய்தல்

**“சந்துயர்ந்தெழு காரகில் தண்புனல் கொண்டுதம்**
**சிந்தைசெய்து அடியார் பரவும்”** (2-140-2)

6) சிவதருமஞ் செய்தல்

**“அறத்தையே புரிந்த மனத்தனாய்....”** (4-20-8)

7) சிவபுராணங் கேட்டல்

**“பாடுவார் பணிவார் பல்லாண்டிசை கூறுபத்தர்கள்**
**சித்தத்துள்புக்கு தேடிக் கண்டு கொண்டேன்”** (4-20-10)

8) சிவாலய தரிசனஞ் செய்தல்
"**நித்தலுமெம் பிரானுடைய கோயில்புக்கு**" (6-245-3)

"**ஒருக்காலும் திருக்கோயில் சூழாராகில்**" (6-309-6)

9) சிவனடியாரிடத்து மட்டும் போசனஞ் செய்தல்
"**பத்தியினாலிடுவாரிடைப் பலிகொள்மினோ**" (7-43-10)

10) சிவனடியார்கட்கு மட்டும் அமுதுபடைத்தல்
"**அண்ணலார் அடியார் தமை அமுதுசெய்வித்தல்**"
(சேக்கிழார் - மண்ணிற்பிறந்)

## ஆ. உடலிலக்கணம் 10

இறைபுகழை சிந்தித்து பேசும்போது

1. கண்டம் விம்முதல்
"**விம்மி விம்மி மெய்ம்மறந்து**" (திருவெம்பாவை)

2. நாக்குத் துடித்தல்
"**ஆரூரா என்றென்றே அலறா நில்லே**"
(திருவாசகம் - மெய்தானரு)

3. உதடு துடித்தல்
"**அழுது காமுற்று அரற்றுகின்றாரையும்**" (5-135-8)

4. சரீரம் நடுங்குதல்
"**மெய்தானரும்பி விதிர்விதிர்த்து**" (திருவாசகம்)

5. ஆனந்தக் கண்ணீர் சொரிதல்
"**காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி ஓதுவார்**"

6. உரோமஞ் சிலிர்த்தல்
"**உற்றுணர்ந்துருகியூறி உள்கசிவுடையவர்க்கு**" (4-70-1)

7. குறு வேர்வை கொள்ளல்
**"மெய்தானரும்பி விதிர்விதிர்த்து"** (திருவாசகம்)

8. நாக்குத் தழுதழுத்தல்
**"கையாற்றொழுது தலைசாய்த்து உள்ளங்கசிவார்கள்"**
(2-196-3)

9. வாய்விட்டழுதல்
**"வல்லாரிசைபாட, விம்மி அழுமாறு வல்லா**
**அழுந்தை மறையோர்"** (2-156-1)

10. பரவசமாய்த் தன்னை அயர்தல்
**"துஞ்சலும் துஞ்சலிலாத போழ்திலும் நெஞ்சகம்**
**நைந்து நைந்து நினைமின் நாள்தொறும்"** (3-280-1)

**இ. அகத்திலக்கணம் 3**

1. பஞ்சாட்சரத்தை மானசமாகச் செபித்தல்
**"நாமத்தெழுத்தஞ்சென் நாவில் கொண்டேன்"** (4-81-8)

2. மானச பூசை – நுண்ணறிவால் வழிபாடு செய்தல்.
**"நித்தலுந் நியமஞ்செய்து நீர்வலந்தூவி**
**சித்த மொன்ற வல்லார்க்கு அருளுஞ்சிவன்"** (2-17-1)

3. சிவபெருமானைத் தன்னொடு பிரிவறக்காண்டல்
**"இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான்காண்"**
(சிவபுராணம் 2)
**"சிவனவன் என்சிந்தையுள் நின்றவதனால்**
**அவனருளாலே அவன்தாள் வணங்கி"** (சிவபுராணம் 17-18)

# 18. திருமுறைகளும் திருமுறையாசிரியர்களும்

| திருமுறை வரிசை | வகை | பாடல்கள் / பதிகம் | | ஆசிரியர்கள் |
|---|---|---|---|---|
| முதலாந் திருமுறை | தேவாரம் | 1469 | 136 | திருஞானசம்பந்தர் |
| இரண்டாந் திருமுறை | தேவாரம் | 1331 | 122 | திருஞானசம்பந்தர் |
| மூன்றாந்திருமுறை | தேவாரம் | 1346 | 126 | திருஞானசம்பந்தர் |
| நான்காந் திருமுறை | தேவாரம் | 1069 | 114 | திருநாவுக்கரசர் |
| ஐந்தாந் திருமுறை | தேவாரம் | 1015 | 100 | திருநாவுக்கரசர் |
| ஆறாந்திருமுறை | தேவாரம் | 980 | 99 | திருநாவுக்கரசர் |
| ஏழாந் திருமுறை | தேவாரம் | 1026 | 101 | சுந்தரமூர்த்தி நாயனார் |
| எட்டாந் திருமுறை | திருவாசகம் | 656 | - | மாணிக்கவாசகர் |
| | திருக்கோவையார் | 400 | - | மாணிக்கவாசகர் |
| ஒன்பதாந் திருமுறை | திருவிசைப்பா | 45 | - | திருமாளிகைத்தேவர் |
| | திருவிசைப்பா | 34 | - | சேந்தனார் |
| | திருவிசைப்பா | 103 | - | கருவூர்த்தேவர் |
| | திருவிசைப்பா | 12 | - | பூந்துருத்திகாடநம்பி |
| | திருவிசைப்பா | 10 | - | கண்டராதித்தர் |
| | திருவிசைப்பா | 10 | - | வேணாட்டடிகள் |
| | திருவிசைப்பா | 42 | - | திருவாலியமுதனார் |
| | திருவிசைப்பா | 22 | - | புருடோத்தமநம்பி |
| | திருவிசைப்பா | 10 | - | சேதிராயர் |
| | திருப்பல்லாண்டு | 13 | - | சேந்தனார் |
| பத்தாந்திருமுறை | திருமந்திரம் | 3047 | - | திருமூலர் |
| பதினொராந்திருமுறை | <u>பிரபந்தங்கள்</u> | 40 | | <u>பன்னிருவர்</u> |
| 1) திருமுகப்பாசுரம் | | 1 | - | 1) திருவாலவாயுடையார் |
| 2) திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம் | | 22 | 1 | 2) காரைக்காலம்மையார் |
| 3) திருவிரட்டை மணிமாலை | | 20 | 1 | 2) காரைக்காலம்மையார் |
| 4) அற்புதத் திருவந்தாதி | | 100 | 1 | 2) காரைக்காலம்மையார் |
| 5) திருவெண்பா | | 24 | | 3) ஐயடிகள் காடவர் கோன் |
| 6) பொன்வண்ணத்தந்தாதி | | 100 | 1 | 4) சேரமான் பெருமானார் |
| 7) திருவாரூர் மும்மணிக்கோவை | | 30 | 1 | 4) சேரமான் பெருமானார் |
| 8) திருக்கைலாயஞான உலா | | 1 | | 4) சேரமான் பெருமானார் |
| 9) கைலைபாதி காளத்தி பாதி யந்தாதி | | 100 | 1 | 5) நக்கீரர் |
| 10) திருவீங்கோய் மலை எழுபது | | 70 | 1 | 5) நக்கீரர் |
| 11) திருவலஞ்சுழி மும்மணிக்கோவை | | 15 | 1 | 5) நக்கீரர் |
| 12) திருவெழுக்கூற்றிருக்கை | | 1 | 1 | 5) நக்கீரர் |

| திருமுறை வரிசை | வகை | பாடல்கள் / பதிகம் | ஆசிரியர்கள் |
|---|---|---|---|
| 13) பெருந்தேவபாணி | | 1 1 | 5) நக்கீரர் |
| 14) கோபப்பிரசாதம் | | 1 1 | 5) நக்கீரர் |
| 15) காரெட்டு | | 8 1 | 5) நக்கீரர் |
| 16) போற்றித்திருவகவல் | | 1 1 | 5) நக்கீரர் |
| 17) திருமுருகாற்றுப்படை | | (317 அடி) 1 | 5) நக்கீரர் |
| 18) திருக்கண்ணப்பதேவர் – திருமறம் | | (151 அடி) 1 | 5) நக்கீரர் |
| 19) திருக்கண்ணப்பதேவர் – திருமறம் | | (38 அடி) 1 | 6) கல்லாடனார் |
| 20) மூத்தநாயனார் திருவிரட்டை – மணிமாலை | | 20 1 | 7) கபிலர் |
| 21) சிவபெருமான் திருவந்தாதி | | 100 1 | 7) கபிலர் |
| 22) சிவபெருமான் திருவிரட்டை – மணிமாலை | | 37 1 | 7) கபிலர் |
| 23) சிவபெருமான் திருவந்தாதி | | 100 1 | 8) பரணதேவர் |
| 24) சிவபெருமான் திருமும்மணிக் கோவை | | 30 1 | 9) இளம்பெருமானடிகள் |
| 25) மூத்தபிள்ளையார் திருமும்மணிக் கோவை | | 23 1 | 10) அதிராவடிகள் |
| 26) கோயில் நான்மணிமாலை | | 40 1 | 11) பட்டினத்தார் |
| 27) திருவிடை மருதூர் மும்மணிக் கோவை | | 30 1 | 11) பட்டினத்தார் |
| 28) திருக்கழுமலமும் மணிக்கோவை | | 30 1 | 11) பட்டினத்தார் |
| 29) திருவேதம் பமுடையான் திருவந்தாதி | | 100 1 | 11) பட்டினத்தார் |
| 30) திருவொற்றியூர் ஒருபாஒருபது | | 10 1 | 11) பட்டினத்தார் |
| 31) பொல்லாப்பிள்ளையார் – திருவிரட்டைமணிமாலை | | 20 1 | 12) நம்பியாண்டார்நம்பி |
| 32) கோயிற்றிருப்பண்ணியர் – விருத்தம் | | 70 1 | 12) நம்பியாண்டார்நம்பி |
| 33) திருத்தொண்டர் திருவந்தாதி | | 89 1 | 12) நம்பியாண்டார்நம்பி |
| 34) ஆளுடையபிள்ளையார் – திருவந்தாதி | | 100 1 | 12) நம்பியாண்டார்நம்பி |
| 35) திருச்சண்பை விருத்தம் | | 11 1 | 12) நம்பியாண்டார்நம்பி |
| 36) திருமும்மணிக்கோவை | | 30 1 | 12) நம்பியாண்டார்நம்பி |
| 37) திருவுலாமாலை | | 1 1 | 12) நம்பியாண்டார்நம்பி |
| 38) திருக்கலம்பகம் | | 49 1 | 12) நம்பியாண்டார்நம்பி |
| 39) திருத்தொகை | | 1 1 | 12) நம்பியாண்டார்நம்பி |
| 40) திருநாவுக்கரதேவர் – திருவேகாதசமாலை | | 11 1 | 12) நம்பியாண்டார்நம்பி |
| பன்னிரண்டாந் திருமுறை திருத்தொண்டர் – பெரியபுராணம் | | 4286 | சேக்கிழார் |

இருபத்தேழு திருமுறையாசிரியர்கள் தந்த 76 நூல்களில், மொத்தம் 18,326 பாடல்கள் உள்ளன.

சுபம்

## அடுத்த வெளியீடு
## "தித்திக்கும் திருமுறை அமுதம்"
## பாகம் 2

பொருளடக்கம்


1. திருமுறைகளில் இறைவன் திருக்கோலம்

(அ) திருமுறை நடனக் காட்சி

i. பொது - பஞ்சகிருத்தியம்

ii. தில்லைத்திருநடனம்

iii. பண்ணிசைக்கேற்ப

iv. உமையம்மை பாட

v. நந்திமத்தளம் முழங்க

vi. பூதகணம் பாட

vii. பல்வகை வாத்தியம் இசைக்க

viii. பாதந்தூக்கி ஆடும்

ix. மகாபிரளய காலத்தில்

(ஆ) இறைவனின் திருமேனித் திருக்கோலம்

2. திருமுறைகளும் மறையோதும் வேதியரும்

3. விசேட நன்னாட்களும் திருமுறைகளும்

4. திருமுறைகளில் தூது (வண்டு, குருகு, கோழி, நாரை)

5. நாயன்மார்கள் நால்வரின் அற்புதத் திருப்பதிகங்கள்

6. திருமுறைகளில் விநாயகர் - முருகன் கடவுளர்

7. உற்சவ காலங்களிலும், விசேட நாட்களிலும் ஓதப்படும் திருமுறைகள் (பஞ்ச புராணம், நவசந்திப் பண்கள், திருப்பொற்சுண்ணம், திருப்பள்ளியெழுச்சி, திருவெம் பாவை, கதவு திறக்கப்பாடிய பதிகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம்)


"தித்திக்கும் திருமுறை அமுதம்" நூல் பற்றிய கருத்துக்களை வரவேற்கின்றோம். திருமுறையுடன் தொடர்பான கட்டுரைகள், நூல்களை விரும்பியோர் அனுப்பி வைக் கலாம். பாகம் (2) இல் சேர்க்கப்படவேண்டிய விடயங்களையும் குறிப்பிடலாம்.

- நூலாசிரியர் -

ஸ்ரீ மாருதி - வழக்கம்பரை